






இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய எம்மை
அழையுங்கள்
416 — 752 — 1524













29ம் ஆண்டில்...
29 years of publishing

www.uthayannews.ca

# UTHAYAN உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada

Canada's Other Voices

$1.00

416-752-1524 www.uthayannews.ca

Canadian Media Circulation Audit

உதயம் 1530 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 1, 2025

# "வரும் செப்டம்பரில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் கனடியஅரசு பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் என்று எமது பிரதமர் மார்க் கார்னி அறிவித்துள்ளதை நாம் வரவேற்போம்!"

## ஸ்காபுறோ ரூஜ் பார்க் பாராளுமன்ற உறுப்பினரும் கனடா உள்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சருமான ஹரி ஆனந்தசங்கரி அறிவிப்பு



இஸ்ரேலிய அரசும் இராணுவமும் பாலஸ்த்தின மக்கள் மீது மேற்கொண்டுவரும் கொடூரமான தாக்குதல்களினால் எங்கள் சமூகத்தில் பலர் ஆழமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த விடயம் தொடர்பாகவும் தங்கள் உ றவுகள் கொல்லப்படுவது தொடரபாகவும் எமமோடு தொடர்பு கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு : உங்கள் குரல்கள் கேட்கப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றேன்.தொடர்ந்து . பாராளுமன்றத்திலும் அமைச்சரவை மேசையிலும் அமைதி மற்றும் நீதிக்கான உங்கள் அழைப்புகளை நான் தொடர்ந்து பிரதிநிதித்துவப்படுத்துவேன்.

இவ்வாறு ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரும் கனடாவின் உள்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சருமான ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் அறிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார். (தொடர்ச்சி 3ம் பக்கம்)

# கொட்டும் மழையிலும் "விழித்தெழு தமிழா" செம்மணி எழுச்சி நிகழ்வில் கண்ணீர்ச் சொட்டுக்களோடு கடைசி வரை நின்ற கனடியத் தமிழ் உறவுகளும் உணர்வாளர்களும், அரசியல் பிரமுகர்களும்

26-07-2025 சனிக்கிழமையன்று 6ம் திகதி சனிக்கிழமையன்று மாலை 6.00 மணிக்கு கனடா ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள **ALBERT CAMPBELL SQUARE** திறந்த வெளியரங்கில் "யாழப்பாணம் செம்மணி புதைகுழிகள் மற்றும் கண்டெடுக்கப்பட்ட எம் உறவுகளின் எலும்புக் கூடுகள் மற்றும் இலங்கை அரசின் கடந்த காலம் தொடக்கமான இனப்படுகொலைகள் ஆகிய காட்டுமிராண்டிச் செயல்களை சர்வதேசம் கண்டிக்கவும் தகுந்த பொறுப்புக் கூரல்களை வலியுறுத்தியும் **BEHIND ME FOUNATION** அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பெற்ற "விழித்தெழு தமிழா" என்று விழிப்புணர்வு எழுச்சி நிகழ்வின் ஆரம்பத்திலிருந்தே மழை கொட்டத் தொடங்கியது. எனினும் கொட்டும் மழையிலும் "விழித்தெழு தமிழா" செம்மணி எழுச்சி நிகழ்வில் கண்ணீர்ச் சொட்டுக்களோடு கடைசி வரை நின்ற கனடியத் தமிழ் உறவுகள். மாவீரர்களின் குடும்பங்களின் உறுப்பினர்கள். உணர்வாளர்கள். அரசியல் பிரமுகர்கள் மற்றும் கலைஞர்கள் கல்வியாளர்கள் மற்றும் அனைவருக்கும் **BEHIND ME FOUNATION, BEHIND INTERNATIONAL MEDIA** ஆகிய அமைப்புக்களின் தலைவரும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான கனேந்திரன் செல்வராஜா நன்றி தெரிவித்துள்ளார். (தொடர்ச்சி 14ம் பக்கம்)












31 Anniversary Grand Sale
S&S
Since 1994
SAMY & SONS
Wholesalers & Retailers
GRAND SALE
31th JULY to 31th AUGUST
Reliable
Trustworthy
Friendly
Textiles, Jewellery, Gift Items & Fancy Goods
Express Money Transfer,
Pawn Broker Interst Offer Price 2%, Etc.
Quality
Quantity
Discounts
BLOWOUT SALE EVERYTHING MUST GO
$33
Premier
$48
Preethi Eco Plus 3 jar
$130
$125
9 piece
EACH $7.00
Saree Blouses,
Saree Underskirts,
Senorita Bras,
Saarams, Skirts,
T-Shirts,
and many more!
NEW ARRIVALS
Pattus Cut Works,
Bridal Soft Silks.
Sequins, &
Cotton Sarees,
Special Salwars
Fancy Lengha Suits,
Kurtha Blouses,
Kurtha Suits,
and many more!
All Unbelievable Blowout Prices
EACH $12.00
Kurtha Tops,
Kurtha Shirts (Men),
Denim Pants,
Dress Pants,
Shirts(Men),
Fancy Frocks(Kids),
Salwars (All Sizes).
Milk Cooker,
Appa Chatti,
Puttu Kudam,
Archunai Basket,
Kundu Dosa Chatti,
Coconut Scrapper.
Steamer $29.00
Banana Leaf Plate $3.50
3 Set Satti $15.00
Silver or Brass Thattus
and more
Many More
Items on Sale
First 25 Customers Get a Free Rice Cooker if Purchase is Over $300
Only for Cloth Items
Fancy Items From 50¢
Tel: 416-298-1598
Cell: 647-239-SAMY (7269)
1884 Kennedy Road (at Ellesmere)
Scarborough, Ontario M1P 2L8
www.samyandsons.com Email: samyandsons@gmail.com
First 25 Customers Get a Free Hot Box if Purchase is Over $150
Only for Cloth Items
அன்றும், இன்றும், என்றும் ஒரே குடையின் கீழ் சாமி அன்ட் சன்ஸ்
SALE! SALE!! SALE!!!

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

## செம்மணியில் உயிரற்று உறங்கிய எம் உறவுகள் எலும்புகளாய் எழுந்துள்ளார்கள்

வளங்கள் பல நிறைந்த இலங்கை என்னும் மாங்கனித்தீவின் மகிமையை நன்கு உணர்ந்த பிரித்தானியர்கள் முழு நாட்டையும் ஆண்டது மாத்திரமன்றி அதனை அபிவிருத்தி செய்ததோடல்லாமல் அதன் பலனை நன்கு அனுபவித்து எமது வளங்களையும் சூறையாடிச் சென்றார்கள். இவ்வாறாக இயற்கையின் வனப்பும் வளங்களும் அதிகளவில் உள்ள அந்த கடல் சூழ்ந்த மண்ணை இனவாதம் என்னும் பேய்கள் தின்றழிக்க முனைந்தன. அதற்கு அரசியல் அதிகாரத்தில் அமர்ந்தவர்களும் துணையாக நின்றார்கள்.

உலகின் பல நாட்டு மக்கள் இலங்கையின் மலைநாடுகளில் உற்பத்தியான தேயிலைச் சாயத்தின் சுவையை ருசித்து அருந்தத் துடித்து நின்ற நேரத்தில் அங்கு தமிழர்களின் இரத்தத்தைத் "குடிக்க" இலங்கையின் இனவாதிகள் துடித்தார்கள். தமிழ் மக்களின் கல்வித் தேடல், வர்த்தகத்துறையில் வெற்றி மற்றும் அரச உயர் பதவிகளை அலங்கரித்த வண்ணங்கள் பெரும்பான்மை இனத்தவர்கள் தமிழர்களை "எதிரிகளாகப் பார்த்த காலம் ஒன்று தோன்றியது. அன்றிலிருந்து எமது தமிழ் மக்கள் பல நூற்றுக்கணக்கான தடவைகள் சிங்கள அரசுகளாலும் அவற்றின் காடையர்களாலும் அத்துடன் அரச பயங்கரவாதிகளான இராணுவம் மற்றும் பொலிஸ் படையினராலும் தாக்கப்பட்டும் கொல்லப்பட்டும் உடமைகள் சூறையாடப்பட்டும் எம்மவர்கள் பார்வைகள் விரிந்தும் விசமத்தோடும் அதிகரித்தன.

இவ்வாறாக அரை நூற்றாண்டு மேலாக ஆற்றல் மிகுந்த இனமாகத் திகழ்ந்த எமது ஈழத்தமிழ் மக்கள் தமிழர்கள் என்ற காரணத்தால் கொலை நோக்கத்தோடு குறி வைக்கப்பட்டார்கள். எனவே அந்த தாக்குதல்களை எதிர்த்து எமது இளைஞர்களின் போராட்டம் ஆரம்பிக்கப்பெற்ற போது அந்தக் கொடியவர்கள் திகைத்து நின்றார்கள். இதனால் எங்கள் மண்ணில் இரத்த ஆறு ஓடத்தொடங்கியது.அதன் விளைவாக எம்மவர்கள் ஆயிரக்கணக்கில் கடத்தப்பட்டும் கொல்லப்பட்டும் புதைக்கப்பட்டார்கள். எனினும் எத்தனை ஆண்டுகள் அரசின் காடையர்களால் கடத்தப்பட்ட தங்கள் உறவுகளைத் தேடித் தேடி அலைந்தனர் அவர்களைப் பெற்றவர்களும் கூடப் பிறந்தவர்களும். பெரும்பான்மை இனத்தின் அரசியல்வாதிகள் அவர்களின் கோரிக்கைகளை புறக்கணித்தார்கள். காணாமற்போனவர்கள் தொடர்பாக எவ்வித அக்கறை இல்லாதவர்கள் ஆட்சியில் அமர்ந்திருந்தார்கள். அவர்களைப் போலவோ எமது தமிழ் மமக்கள் வாக்களித்து பாராளுமன்ற அனுப்பி வைத்த எமது தலைவர்கள் காணாமற்போனவர்கள் உறவுகள் அவர்களின் உதவிகள் கேட்டுச் சென்ற போது எமது மக்கள் பிரதிநிதிகளாலேயே உதாசீனம் செய்யப்பட்டார்கள்.

இன்று எமது உறவுகள் தேடித் தேடி நாட்களை கழித்தவர்களுக்குக் கிட்டிய கொடிய செய்தி எதுவென்றால் ஒவ்வொன்றாக புகைகுழிகளிலிருந்து எழுந்து வருகின்றார்கள் என்பதே ஆகும். ஆமாம்! கொடிதிலும் கொடிதான காட்சிகள் எம் கண்களின் முன்பாக. எம் உறவுகள் தசையும் இரத்தமும் மண்ணோடு கரைந்து போக. எலும்புகளாய் எழுந்து வருகின்றார்கள். நாம் இந்தக் கதிரோட்டத்தை வடித்துக் கொண்டிரக்கும் அதே நேரத்தில் கூட யாழ்ப்பாணம் செம்மணி மற்றுமொரு எலும்புக் கூடுகளின் தொகுதி அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் அரங்கேற்றிய கொடுமைகளின் தொடரான சாட்சிகளாக அவை மண்ணிலிருந்து "பிறக்கின்றனவா?"

மேலும், நாம், எம்மவர்களின் எலும்புகளை ஒரு காட்சிப் பொருளாகப் பார்க்கக்கூடாது என்பதை நாம் உணரவேண்டும். அவற்றை எமது மரியாதையோடு எடுத்து இனப்படுகொலையாளர்களின் ஈனச் செயல்களுக்கு எதிராக நீதி கேட்டுப் போராட வேண்டும். அத்துடன் எமது உறவுகள் எவ்வளவோ வலிகளையும் தாங்கியவண்ணம் தங்கள் அரிய உயிர்களை அர்ப்பணித்தார்களே.!.அவர்கள் என்ன குற்றம் இழைத்தார்கள்ஷ, தமிழர்களாய் பிறந்து விட்டால். இலங்கையின் கொடிய ஆட்சியாளர்களுக்கும் அவரது கையாட்களான நூற்றுக்கணக்கான தமிழர்களான நம் விரோதிகளுக்கும, ' இராணுவக் கொடியவர்களுக்கும் நம் உறவுகள் குற்றம் செய்யாமலே "குற்றவாளிகள்" ஆக்கப்பட்டுள்ளார்கள்.

கனடாவில் மாத்திரமல்ல, உலகெங்கும் உள்ள எம்மவர்கள் அனைவரும் தொடர்ந்து வரும் போராட்டங்களில் கூட்டமாகப் பங்கெடுக்க வேண்டும்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

## "வரும் செப்டம்பரில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் கனடியஅரசு பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் என்று எமது பிரதமர் மார்க் கார்னி அறிவித்துள்ளதை நாம் வரவேற்போம்!"

இந்த செப்டம்பரில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் கனடாவின் அரசாங்கம் பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் என்று எ மது பிரதமர் மார்க் கார்னி அறிவித்தார்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கை, இஸ்ரேலுடன் அமைதி மற்றும் பாதுகாப்பில் இணைந்து வாழும் ஒரு சுயாதீனமானதும் , சாத்தியமானதும் மற்றும் இறையாண்மை கொண்டதுமான பாலஸ்தீன அரசு என்ற இரு-அரசு தீர்வுக்கான கனடாவின் நீண்டகால உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது என்று நாம் நம்பலாம்.

அக்டோபர் 7 தாக்குதல் மற்றும் இஸ்ரேலின் இருப்பு ரிமையை அது நிராகரித்தல் உட்பட ஹமாஸ் அமைப்பின் தொடர்ச்சியான அச்சுறுத்தல்களையும் நாம் கண்டிக்கின்றோம்

காசாவில் மனிதாபிமான பேரழிவைத் தடுக்கவும் உதவிக்கான அணுகலை உறுதி செய்யவும் இஸ்ரேலிய அரசாங்கம் தவறிவிட்டது என்பதையும் நாம் அறிவோம்..

இரு-அரசு தீர்வைப் பாதுகாப்பது என்பது வன்முறையை விட அமைதியைத் தேர்ந்தெடுக்கும் அனைத்து மக்களுடனும் நிற்பதும், நீடித்த அமைதியை நோக்கி அவசரமான, ஒருங்கிணைந்த நடவடிக்கையை எடுப்பதும் அவசியம் ஆகும்.

இந்த அங்கீகாரம் பாலஸ்தீன ஆணையம் முக்கிய சீர்திருத்தங்களை செயல்படுத்துவதைப் பொறுத்தது: ஜனநாயக ஆட்சி, 2026 இல் சுதந்திரமான தேர்தல்கள் மற்றும் பாலஸ்தீன அரசின் இராணுவமயமாக்கல் தொடர்கின்றது. எனினும் ஹமாஸ் அமைப்பானது உடனடியாக அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிக்க வேண்டும், , மேலும் பாலஸ்தீனத்தின் எதிர்கால நிர்வாகத்தில் எந்தப் பங்கையும் ஹமாஸ் அமைப்பு கொண்டிருக்கக்கூடாது என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு கனடியப் பிரதமரின் அறிக்கை தொடர்பாக கருத்துக்களைப் பகிர்ந்துள்ள ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனஅழுத்தம், தலைவலி நீரிழிவு நோய், வயிற்றுவலி மாதவிடாய் சம்பந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5




இலங்கை செய்திகள்
Sri Lanka News

G. f[pe;jd;

# "ஒரு அழகான கடற்கரை மனங்கவரும் ஒரு சுற்றுலாத்தளம்" வேலைத்திட்டம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்!



"ஒரு அழகான கடற்கரை மனங்கவரும் ஒரு சுற்றுலாத்தளம்" என்ற கருப்பொருளில் நாடளாவிய ரீதியில் கடற்கரைகளை சுத்தம் செய்யும் திட்டம் செவ்வாய்க்கிழமையன்று (29.07.2025) பண்ணை கடற்கரையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடற்கரையினை சுத்தப்படுத்தும் ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ம.பிரதீபன் இணைந்து சிறப்பித்ததுடன் சுத்தப்படுத்தும் பணியிலும் இணைந்து கொண்டார்.

மேன்மைதங்கிய கௌரவ ஜனாதிபதியின் உயரிய எண்ணக்கருவில் அமைந்த 'Clean SriLanka' திட்டத்தின் மூலம் சுற்றுச் சூழலை தூய்மையாக வைத்திருத்தல், டிஜிட்டல் மயமாக்கல், வறுமை ஒழிப்பு முதலான விடயங்கள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.





இத் தேசிய ரீதியான திட்டத்தினை செயற்படுத்திடும் நோக்கில் பண்ணைகடற்கரைப் பிரதேசத்தினை சுத்தம் செய்யும் பணி இன்று காலை 7 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. குறித்த தூய்மைப்படுத்தும் பணியானது 51 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இச்சுத்தப்படுத்தும் பணியில் யாழ்ப்பாண மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர், இராணுவ உயர் அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர், பொலிஸார் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# நல்லூர் கந்தன் ஆலய வளாகத்திற்குள் அத்துமீறி உள்நுழைந்த இராணுவ சிப்பாய்களினால் பரபரப்பு!



வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தன் ஆலய வளாகத்தில் இராணுவத்தினர் அத்துமீறி உள்நுழைந்ததால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருகையில், வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தன் ஆலய பெருந்திருவிழாவானது 29ம் திகதி அன்றையதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் வெகு சிறப்பாக ஆரம்பமாகியது.

இதன்போது நல்லூர் ஆலய முன் வாயிலால் திடீரென ஒரு இராணுவ வாகனம் உள்நுழைந்ததால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

நல்லூர் திருவிழா காலத்தில் குறித்த பகுதியில் நல்லூர் ஆலய வளாகத்திற்கு தண்ணீர் பாய்ச்சும் யாழ்ப்பாணம் மாநகர சபையின் வாகனத்தை தவிர வேறு எந்த வாகனத்துக்கும் உள்ளே செல்வதற்கு அனுமதி இல்லை. அத்துடன் பாதணிகளுடன் செல்வதற்கும் அனுமதி இல்லை.

நல்லூர் கந்தன் ஆலயமானது உலகலாவிய ரீதியில் சிறப்பு பெற்று விளங்குகிறது. இவ்வாறான சூழ்நிலையில் இராணுவத்தினரின் குறித்த வாகனம் அத்துமீறி உள்நுழைந்தமை தமிழர்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இராணுவத்தின் அடாவடி இன்னமும் தொடர்கிறதா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுகின்றது.

கடந்த வருடம் திருவிழாவின்போதும் பௌத்த பிக்கு ஒருவர் வாகனத்தில் நல்லூர் வளாகத்திற்குள் சென்று அடாவடித்தனத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் முறையற்ற கழிவகற்றல் உயிர் பல்வகமைக்கு ஆபத்து விளைவிக்கும் என்கிறார் யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் கணபதி கஜபதி!



யாழ்ப்பாணத்தில் முறையாற்ற கழிவகற்றல் உயிர்பல் பல்வகமைக்கு ஆபத்து - வளைவிக்கும் எனத் தெரிவித்துள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விலங்கியல் பேராசிரியர் கணபதி கஜபதி அவர்கள் தொடர்ந்து அது பற்றி உரையாடுகையில் "நகரமயமாதல், பொருளாதார வளர்ச்சி, வாழ்க்கை தர அதிகரிப்பு மற்றும் குடித் தொகை அதிகரிப்பு கழிவகற்றல் செயற்பாட்டிற்கு சவாலாக இருக்கின்ற நிலையில் அதற்கேற்ற முறையான கழிவகற்றறல் பொறிமுறை இன்னும் தமிழர் பகுதிகளில் உருவாக்கப்படவில்லை. என்பதும் இதற்கான முக்கிய காரணமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புலம்பெயர் பறவைகளான வலசைப் பறவைகள் அரிதாக காணப்படுகின்ற சரசாலை குருவிக்காடு, நாகர்கோவில் பகுதி மற்றும் அரியாலைப் பகுதி முறையற்ற கழிவகற்றல் மற்றும் முறையற்ற கழிவு முகாமைத்துவத்தினால் ஆபத்தை எதிர்கொள்ளும் பகுதிகளாக காணப்படுகின்றன.

மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வீதிகளில் கழிவுகள் வீசப்படுகின்றன எரியூட்டப்படுகின்றன இவை அனைத்தும் சட்டத்துக்கு முரணான செயற்பாடாகும்.

முறையற்ற கழிவகற்றலினால் சமூகத்தில் வாழுகின்ற உயிரினங்கள் பாரிய சவால்களை எதிர் நோக்குகின்றன.

சரசாலை, நாகர்கோயில் மற்றும் அரியாலை பகுதிகள் அடையாளப் படுத்தப்பட்ட பாதுகாக்கப்பட வேண்டிய பகுதிகளாக காணப்படுகின்ற நிலையிலும் அங்கு உக்க முடியாத கழிவுகள் தொடர்ந்து கொட்டப்படுகின்றது.


கடற்கரை ஓரமாக மற்றும் அடர்ந்த பற்றைகள் உள்ள பிரதேசங்களில் இவ்வாறு கழிவுகள கொட்டப்படும் போது அவற்றை விலங்குகள் மற்றும் பறவை இனங்களின் உணவுக்காக தேடிச் செல்கின்றன. அவற்றை உண்ணும் போதும் விலங்குகள் மற்றும் பறவை இனங்களின் உணவுத் தொகுதிக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய கழிவுகள் கொட்டப்படுவதை அவதானிக்க முடிகிறது. அண்மையில் நெடுந்தீவு பிரதேசத்தில் குதிரைகள் இறந்து கிடந்த போது அவற்றை ஆய்வு செய்தபோது அவற்றின் வயிற்றுக்குள் பொலுத்தீன் பைகள் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

சூழலைப் பற்றிய அறிவு இல்லாமல் கழிவகற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் போது மனிதனுக்கு மட்டுமல்ல சூழலில் வாழுகின்ற உயிரினங்களுக்கும் அது ஆபத்தை விளைவிக்கக் கூடியதாக இருக்கும். ஒரு சூழல் வாழ்கின்ற மனிதன் மற்றும் உயிரிகளின் இயல்பான வாழ்க்கைக்கு முறையான கழிவகற்றல் பொறிமுறை செயல்படுத்தப்பட வேண்டும். அல்லாவிட்டால் சூழலில் வாழ்கின்ற ஒரு அங்கி அல்லது ஒரு அங்கம் பாதிக்கப்படுமானால் அது ஒட்டுமொத்த சூழலையும் பாதிக்கும்.

ஆகவே யாழ் மாவட்டத்தில் முறையான கழிவு முகமைத்துவம் பின்பற்றப்படாத நிலையில் கழிவகற்றல் செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம் பெறுவது எதிர்காலத்தில் பாரிய அனர்த்தத்துக்கு வழிவகுக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

Tamilthakaval.org

ஒரு இலவச சேவை -- A Free Service



இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.

மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்ககூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.

செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள். இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது. உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

## செம்மணி சித்துப்பாத்தி புகைகுழிகளிலிருந்து மேலும் மூன்று மனித எலும்பு தொகுதிகள் புதிதாக அடையாளம்!



சித்துப்பாத்தி புதைகுழி அகழ்வு பணிகள் 31ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் முன்னெடுக்கப்பட்ட போது புதிதாக மூன்று மனித எலும்பு தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், 31ம் திகதி அன்றையதினம் மூன்று எலும்பு தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன் மூன்று மனித எலும்பு தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டது.

அந்தவகையில் இதுவரை மொத்தமாக 105 எலும்பு தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அகழ்ந்தெடுக்கப்பட்ட எலும்பு தொகுதிகள் நீதிமன்றத்தின் கட்டுக்காவலுக்குள் கொண்டு செல்லப்பட்டுள்ளது. வருகின்ற ஞாயிற்றுக்கிழமையும், ஆகஸ்ட் 2ம் திகதி மற்றும் ஆகஸ்ட் 3ம் திகதி திங்கட்கிழமை ஸ்கேன் பரிசோதனைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.

## யாழ்ப்பாணத்தில் நோய்களின் தாக்கம் தாங்க முடியாமல் வயோதிபப் பெண் தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு!

யாழ்ப்பாணத்தில் வியாதிகளின் தாக்கம் தாங்க முடியாமல் வயோதிபப் பொண்ணொருவர் 30ம் திகதி புதன்கிழமை அறையதினம் தவறான முடிவு எடுத்து உயிர்மாய்த்துள்ளார். நீர்வேலி வடக்கு நீர்வேலி பகுதியைச் சேர்ந்த அருந்தவரத்தினம் சத்தியஞானதேவி (70) என்பவரே இவ்வாறு உயிர்மாய்த்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், இவருக்கு பல்வேறு விதமான நோய்கள் காணப்படுகின்றன. இந்நிலையில் வியாதியின் தாக்கம் தாங்க முடியாமல் அன்றையதினம் (30) கிணற்றில் விழுந்து உயிர்மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார்.

## யாழ்ப்பாணத்தில் கொடுக்கல் வாங்கல் பிரச்சினையால் குடும்பஸ்தர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு!

பு.கஜிந்தன்

யாழ்ப்பாணத்தில் கொடுக்கல் வாங்கல் பிரச்சினையால் குடும்பஸ்தர் ஒருவர் 30ம் திகதிஜ அன்றையதினம் தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்துள்ளார். கோப்பாய் - கட்டைப்பிராய் பகுதியைச் சேர்ந்த சுந்தரம் கோணேஸ்வரன் (வயது 66) என்பவரை பார் உயிர்மாய்த்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபருக்கு கொடுக்கல் வாங்கல் பிரச்சினை இருந்துள்ளது. இந்நிலையில் மனவிரக்தியால் தவறான முடிவெடுத்து அன்றையதினம் தூக்கில் தொங்கி உயிர் மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். சாட்சிகளை கோப்பாய் பொலிஸார் நெறிப்படுத்தினர்.




Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

இலங்கை செய்திகள்
Sri Lanka News

கனகராசா சரவணன்

# காத்தான்குடியில் தனிமையில் இருந்த பெண்ணின் கையை பிடித்து இழுக்க முற்பட்ட கலியாண தரகருக்கு 14 நாட்கள் விளக்கமறியல்

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் வீடு ஒன்றில் அத்துமீறி உள்நுழைந்து தனிமையில் இருந்த பெண்ணின் கையைப்பிடித்து இழுக்க முற்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட திருமணசேவை புரோக்கரை எதிர்வரும் 12ம் திகதிவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைத்துமாறு மட்டக்களப்பு நீதவான் நீதமன்ற நீதவான் 25ம் திகதி வெள்ளிக்கிழமை(25) உத்தரவிட்டார்.

குறித்த பிரதேசத்தில் கடந்த ஒருவருடத்திற்கு முன்னர் திருமணபுரோக்கர் ஒரு பெண் ஒருவரை ஆண் ஒருவருக்கு திருமணம் பேசி திருமணம் முடித்துவைத்து அதற்கான தரகு பணத்தை பெண் மற்றம் மாப்பிளை வீட்டாரிடம் பெற்றுக் கொண்டார்.

இந்த நிலையில் அண்மையில் திருமணம்முடித்த பெண்ணின் கணவர் வேலைக்குச் சென்ற பின்னர் வீட்டில் பெண் தனிமையில் இருந்து வந்துள்ள நிலையில் வீட்டின் வாசல் கதவை திறந்து சட்டவிரோதமாக உட் சென்று வாசல் கதவில் அவரது தொலைபேசி இலக்கத்தை பெறித்துவிட்டு சென்றுள்ளார்.

திருமணபுரோக்கரின் செயற்பாடு தொடர்பாக கணவனிடம் மனைவி தெரிவித்ததையடுத்து அவரை கணவர் தொலைபேசி ஊடாக எச்சரித்த நிலையில் குறித்த திருமண புரோக்கர் சம்பவதினமான வியாழக்கிழமை (24) பகலில் பெண்ணின் வீட்டிற்குள் உள்நுழைந்து தனிமையில் இருந்த பெண்ணின் கையை பிடித்து இழுக்க முற்கட்டதையடுத்து அவர் அலறியடித்துக் கொண்டு ஓடி வீட்டை விட்டு வெளியேறி அயலவர் வீட்டிற்குள் புகுந்துள்ளதையடுத்து அவர் அங்கிருந்து தப்பி ஒடியுள்ளதாக பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இதனையடுத்து குறித்த பெண் பொலிஸ் நிலைய பெண்கள் பிரிவில் செய்த முறைப்பாட்டுக்கமைய 2 பிள்ளைகளின் தந்தையான 40 வயதுடைய திருமண புரோக்கரை கைது செய்து மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் நீ-தவான் முன்னிலையில் வெள்ளிக்கிழமை (25) ஆஜர்படுத்தியதையடுத்து அவரை எதிர்வரும் 12 ம் திகதி வரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.



# ராமநாதபுரம் அருகே இலங்கைக்கு கடத்துவதற்காக கொண்டு வரப்பட்ட 2250 கிலோ பீடி இலைப் பொதிகள் பறிமுதல்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

## ஒருவர் கைது: கியூ பிரிவு போலீசார் நடவடிக்கை

(30-07-2025)

ராமநாதபுரம் அடுத்த வெள்ளரி ஓடை கடற்கரையில் இருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக லாரியில் கொண்டு வரப்பட்ட பீடி இலைப்பொதிகளை மடக்கிப் பிடித்த கியூ பிரிவு போலீசார். இது சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பெயரில் வெள்ளரி ஓடை பகுதியை சேர்ந்த ஒரு-வரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ராமநாதபுரம் மாவட்டம் இலங்கைக்கு மிக அருகில் இருப்பதால் ராமநாதபுரம் மாவட்ட கடற்கரையில் இருந்து சமையல் மஞ்சள், சுக்கு, கஞ்சா, கடல் அட்டைகள், பீடி இலை பண்டல்கள் உள்ளிட்டவைகள் அதிக அளவு இலங்கைக்கு கடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் 30ம் திகதியன்று புதன்கிழமைஅதிகாலை ராமநாதபுரம் அடுத்த வெள்ளரி ஓடை கடற்கரை யிலிருந்து இலங்கைக்கு பீடி இலை பண்டல்கள் கடல் வழியாக சட்டவிரோதமான முறையில் கடத்த இருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் குநு கியூ பிரிவு போலீசார் திடீர் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது கண்டெய்னர் லாரி ஒன்றில் இருந்து இலங்கைக்கு பீடி இலை பொதிகளை படகில் ஏற்றி கொண்டிருந்தபோது அவர்களை மடக்கிப் பிடிக்க முயன்ற போது கடலில் படகில் இருந்த இருவர் 10 மூட்டை பீடி இலை பொதிகளுடன் கடல் வழியாக தப்பினர்.



மேலும் பீடி இலை ஏற்றி வந்த கண்டெய்னர் லாரியை பறிமுதல் செய்த கியூ பிரிவு போலீசார் இச்சம்பவத்தில் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் வெள்ளரி ஓடை பகுதியை சேர்ந்த பாலகிருஷ்ணன் என்பவரை பிடித்து ராமநாதபுரம் சுங்கத்துறை அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

மேலும் கடல் வழியாக தப்பிச் சென்ற மர்ம நபர்கள் இருவர் குறித்து கியூ பிரிவு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

Thana Insurance Inc

T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் முன்னாள் பெண் விடுதலைப் புலிகள் போராளி தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு!

யாழ்ப்பாணத்தில் திருமணமாகாத முன்னாள் பெண் போராளி ஒருவர் தவறான முடிவெடுத்து 29ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று உயிர் மாய்த்துள்ளார். கொக்குவில் கிழக்கு பகுதியைச் சேர்ந்த சிறீஸ்கந்தராசா தவரூபி (வயது 48) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், இவர் தனது சகோதரியுடன் வாசித்து வந்துள்ளார். இந்நிலையில் மன விரக்தியில் இன்று மதியம் உணவருந்திய பின்னர் தனக்குத்தானே மண்ணெண்ணெயை ஊற்றி தீமூட்டி உயிர்மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# "இது நாடா அல்லது சுடுகாடா?" என்ற கோஷத்துடன் மன்னாரில் ஆர்ப்பாட்டம்

இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய மனித புதைகுழி அமைந்துள்ள மன்னாரில், இலங்கையில் காணப்படும் அனைத்து மனித புதைகுழிகளையும் சர்வதேச தரத்திற்கு அமைய அகழ்வாய்வு செய்யுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

"எங்கே எங்கள் உறவுகள் எங்கே?," "இலங்கை அரசே இது நாடா அல்லது இடுகாடா?", "வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும்," "மனிதனும் புதைகுழிக்குள் நீதியும் புதைகுழிக்குள்ளா", போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு மன்னார், அடம்பன் சந்தியிலிருந்து திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி வரை பேரணியாக சென்ற மன்னார் மக்கள், மனித புதைகுழிகள் குறித்த அகழ்வாய்வுகளை வெளிப்படையான முறையில் மேற்கொள்ளுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தினர்.

இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய புதைகுழி மன்னாரில் உள்ள சதொச புதைகுழி ஆகும், அங்கு 28 சிறுவர்களின் எலும்புகள் உட்பட 376 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன. இலங்கையில் நான்காவது பெரிய மனித புதைகுழியாக மன்னாரில் உள்ள திருக்கேதீஸ்வரம் புதைகுழி தற்போது மாறியுள்ளது. அங்கு 82 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

கறுப்பு ஜூலையின் இரண்டாவது நாளான 24ம் திகதி இடம்பெற்ற கவனயீர்ப்புப் போராட்டமும், பேரணியும் திருக்கேதீஸ்வரம் புதைகுழியில் புதைக்கப்பட்ட தமிழர்களுக்கு மலர் தூவி, மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தி நிறைவு செய்யப்பட்டதாக பிரதேச ஊடகவியலாளர்கள் கூறுகின்றனர்.

இனப்படுகொலைக்கு சாட்சியாக இருக்கும் திருக்கேதீஸ்வரம் புதைகுழிக்கான நீதி தாமதமாகியுள்ளதாக போராட்டத்திற்கு தலைமைத் தாங்கிய மாந்தை மேற்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர்களில் ஒருவர் குறிப்பிட்டார்.



"மனித புதைகுழிகள் முறையான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படாமல் வெறும் கண்துடைப்புக்கு விசாரணைகளை நடத்தி காலம் கடத்துவதற்கு இலங்கை அரசு முயற்சிக்கின்றது. நாம் நிற்கின்ற திருக்கேதீஸ்வரம் புதைகுழிகூட இன அழிப்பு, இனப்படுகொலையின் சாட்சியாக இருக்கின்றபோதிலும் அது அகழ்வின் பின்னர் நீண்டகாலமாக கிடப்பில் போடப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு முழுவதும் இந்த நிலைமை தொடர்கிறது. அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட செம்மணியில் அகழ்வு இடம்பெறுகின்றபோதிலும் அது சர்வதேச தரத்திற்கு அமைய இடம்பெறவில்லை. எனவே இந்த நாட்டில் கண்டறியப்பட்ட மனித புதைகுழிகள் முறையான ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். அதில் ஒரு வெளிப்படைத்தன்மை பேணப்பட வேண்டும்."

மாந்தை மேற்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம், ஜனாதிபதி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றுக்கு அனுப்பி வைப்பதற்காக, தங்கள் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை சந்தியோகு மார்கஸிடம் கையளித்ததாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வடக்கு மற்றும் கிழக்கில் காணப்படும் அனைத்து புதைகுழிகளிலும் புதைக்கப்பட்டுள்ள தங்கள் அன்புக்குரியவர்களுக்கு நீதியை உறுதி செய்ய சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்றுமாறு மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை சந்தியோகு மார்கஸ் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தினார்.





"இந்த இடத்திலே (திருக்கேதீஸ்வரம்) புதைக்கப்பட்டவர்கள் யார் என்பது இனங்காணப்பட வேண்டுமென்றும், வடக்கு கிழக்கிலே இருக்கின்ற புதைகுழிகளை இனங்கண்டு, அந்த புதைகுழிகளுக்குள் இருக்கும் எங்கள் உறவுகளை புதைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி உறவுகளை இழந்து தவிக்கின்றவர்களுக்கு நீதியை வழங்க சர்வதேச சமூகத்துடன் இலங்கை அரசு இணைந்து செயற்பட வேண்டுமென எங்களுடைய உறவுகள் புதைக்கப்பட்ட இந்த மண்ணில் நின்று கோருகின்றேன்."

# வவுனியாவில் இடம் பெற்ற இளைஞர் மற்றும் யுவதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சி முகாம்





வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார பிரிவுடன், Visions Global Empowerment, Sri Lanka – Ratnam Foundation, UK நிறுவனங்கள் இணைந்து, க.பொ.உயர்தர கல்வியை நிறைவு செய்த இளைஞர் யுவதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சியினை வவுனியாவில் சிறப்பாக நடாத்தியது.

வவுனியாவின் அமைந்துள்ள வடமாகாண தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப கேந்திர மத்திய நிலையத்தில் யூலை 17 முதல் 20ம் திகதி வரை நடாத்தப்பட்ட தலைமைத்துவ பயிற்சியில் வடமராட்சி மற்றும் தென்மராட்சி வலயங்களின் 17 பாடசாலைகளைச் சேர்ந்த 13 இளைஞர்கள் மற்றும் 27 யுவதிகள் நான்கு நாட்கள் கலந்துகொண்டு தலைமைத்துவம் சார்ந்த பங்கேற்றல் முறை செயற்பாடுகள் வழியில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

இளைஞர் மற்றும் யுவதிகளின் சுய விழிப்புணர்வு, தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பல், தலைமைத்துவம், குழுச் செயற்பாடு, தொடர்பாடல், திட்டமிடல், நேர முகாமைத்துவம் மற்றும் முன்வைப்பு திறன் சார்ந்த திறன் விருத்திக்கு இந்தப் பயிற்சி ஒரு வாய்ப்பாக அமைந்தது எனலாம்.



இந்தப் பயிற்சிப் பட்டறையினை, தனிப்பட்ட மற்றும் தொழில்சார் வாழ்க்கை தொடர்பான ஊக்குவிப்பிற்கும் தங்களை வெளிப்படுத்துவதற்கான சிறந்த களமாக பயிலுனர்கள் பயன்படுத்திக்கொண்டனர்.

தலைமைத்துவ பயிற்சியினைப் பற்றி உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி மாணவர். அபிராம் அவர்கள் குறிப்பிடும்போது, "இந்தப் பயிலரங்கின் மூலம் நான் என்னை சிறப்பாக அறிந்து கொண்டேன். குறிப்பாக, எனது பலம், பலவீனம் மற்றும் தலைமைத்துவ திறன்களை தெளிவாக புரிந்துகொள்ள முடிந்தது. என்னைப் பற்றிய என் எண்ணங்களை திட்டமிட்டு வெளிப்படுத்தும் திறனை வளர்த்துக்கொண்டேன். நேர்மையாக பேசுவது, நேரத்தை திறம்பட நிர்வகிப்பது மற்றும் சிறிய செயல்களையும் திறம்பட மேற்கொள்ளும் ஆர்வத்தை இங்கே கற்றுக்கொண்டேன். முன்பு சவால்களைத் தவிர்க்க முயற்சித்திருந்த நான், இப்போது அவற்றை நேரடியாக எதிர்கொள்வதற்கான தன்னம்பிக்கையுடனும் தயாராகவும் இருப்பதை உணர்கிறேன்."

விசன்ஸ் நிறுவனத்தின் வளவாளர்களால் வதிவிட முறையில் நடாத்தப்பட்ட இப்பயிற்சியில், வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு.பட்ரிக் டிரஞ்சன் அவர்கள் மூன்றாம் நாளில் கலந்து கொண்டு, மாணவர்களின் தலைமைத்துவ விருத்திக்கு ஆலோசனைகளை வழங்கியது பயிற்சிக்கு மென்மேலும் சிறப்பாக அமைந்தது.

# யாழ்ப்பாணத்தில் பாம்பு கடிக்கு இலக்கான இளைஞன் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம் புத்தூர் கிராமத்தில் பாம்பு கடிக்கு இலக்கான இளைஞர் ஒருவர் இன்றையதினம் உயிரிழந்துள்ளார். புத்தூர் மேற்கு, புத்தூர் பகுதியைச் சேர்ந்த செல்வச்சந்திரன் மிரோஜன் (வயது 27) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த இளைஞர் செவ்வாய்கிழமை 29ம் திகதி அன்றிரவு அயலில் உள்ள ஆலயத்தில் இசை நிகழ்வை பார்வையிட சென்றுள்ளார். இசை நிகழ்விற்கு சென்ற மகன் திரும்பி வராத காரணத்தால் தாயார் 30ம் திகதி அன்று காலை 5 மணியளவில் தேடிச் சென்றுள்ளார். இதன்போது குறித்த இளைஞர் வீட்டு ஒழுங்கைக்குள் அசைவற்று காணப்பட்டார்.

உடனே புத்தூர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். பின்னர் உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். பாம்பு தீண்டியதால் மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

G. f[pe;jd;

# தமிழக மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடித்தல் மற்றும் உள்ளூர் சட்டவிரோத மீன்பிடித்தல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள பருத்தித்துறை மீனவர்கள்!




இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடி, உள்ளூர் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள பருத்தித்துறை மீனவர்கள்!

யாழ். வடமராட்சி - பருத்தித்துறை கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையால் யாழ் மாவட்ட மீனவர்களின் வலைகள் அழிக்கப்பட்டு வருவதாக கடற்றொழிலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக பருத்தித்துறை கடற்பரப்பில் கடந்த சில தினங்களாக எல்லை தாண்டி இந்திய தீனவர்களது இழுவைமடி படகுகளின் மீன்பிடி அதிகரித்துள்ளது.

இதனால் நாளாந்தம் எமது வலைகள் அறுத்தழிக்கப்பட்டு வருகிறன. இதனால் பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் இழுவைப்படகுகளால் அறுத்தழிக்கப்படுவதுடன் வலைகள் காணாமல்ப் போவதாகவும் கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில வாரங்களாக இந்திய மீனவர்களது இழுவைப்படகுளின் எல்லை தாண்டிய மீன்பிடியால் பருத்தித்துறை பகுதி கடற்றொழிலாளர்களது வலைகள் அழிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் உள்ளூரில் சட்டவிரோத மீன்பிடியான சுருக்குவலைத் தொழில் நடவடிக்கையால் எமது வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி வருகிறது.

இதனைக் கட்டுப்படுத்த இலங்கையின் மீன்பிடி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் இந்திய மீனவர்களின் அத்துமீறலையும் தடுத்து நிறுத்த வேண்டும் என கடற்றொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# உறவினரை சந்திப்பதற்கு முலலைத்தீவிலிருந்து அச்சுவேலிக்கு வந்த முதியவரான பெண் ஒருவர் மோட்டார் சைக்கிள் மோதி உயிரிழப்பு!

யாழ்ப்பாணம் அச்சுவேலியில் வீதியை கடக்க முயற்சித்த முதியவர் ஒருவர் மோட்டார் சைக்கிள் மோதியதில் 28ஆம் திகதி உயிரிழந்தார். முல்லைத்தீவு, உடையார்கட்டு பகுதியைச் சேர்ந்த இளையதம்பி நந்தகுமார் (வயது 70) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், இவர் அச்சுவேலியில் உள்ள உறவினரை சந்திக்க வந்துள்ளார். இந்நிலையில் இவர் 27ஆம் திகதி இரவு அச்சுவேலி பகுதியில் இடது பக்கத்தில் இருந்து வலது பக்கத்திற்கு வீதியை கடப்பதற்கு முயற்சித்துள்ளார்.

இதன்போது வீதியால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் இவர்மீது மோதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி 28ஆம் திகதி உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகள் இன்றையதினம் மேற்கொள்ளப்பட்ட நிலையில் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி அகழ்வின்போது சிறிய எலும்புத் தொகுதியை அரவணைத்தவாறு காணப்பட்ட பெரிய எலும்புத் தொகுதி!



29ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றையதினம் (29) அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டபோது பெரிய மனித எலும்புத் தொகுதியுடன் சிறிய குழந்தையின் மனித எலும்புத் தொகுதியும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சட்டத்தரணி ரணித்தா ஞானராஜா தெரிவித்துள்ளார்.

சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் குறித்து 30ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், பெரிய மனித எலும்புத் தொகுதியுடன் சிறிய எலும்பு தொகுதியானது அரவணைக்கப்பட்ட நிலையில் குறித்த எலும்புத் தொகுதிகள் காணப்படுகிறன.

அது சுத்தப்படுத்தப்பட்டு, அடையாளப்படுத்தப்பட்டு இன்று காலை முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

கனகராசா சரவணன்

# கருணாவின் கட்டளைப்படி இனியபாரதியால் கடத்திக் கொல்லப்பட்டு பின்னர் புதைக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் தம்பிலுவில் மயானத்தில் தோண்டும் நடவடிக்கை

இனியபாரதி தலைமையில் கடத்தப்பட்டு காணாமல் போன 18 வயது மாணவன் பார்தீபன், முன்னாள் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் சு.ரவீந்திரநாத், ஊடகவியலாளர் எதிதினியாக கொட ஆகியோர் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள தம்பிலுவில் இந்து மயானத்தில் தோண்டும் நடவடிக்கை ஒன்றை 31ம் திகதியன்று வியாழக்கிழமை சிஐடியினர் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் இடம்பெற்று வருகின்றது.

கருணா கட்சியைச் சேர்ந்த இனியபாரதி என அழைக்கப்படும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஒருங்கிணைப்பாளருமான கே. புஷ்பகுமார் மற்றும் அவரது சகாவான சசீந்திரன் தவசீலன் ஆகியோரை 2007-6-28 ம் திகதி திருக்கோவில்

பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் படுகொலை தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் கடந்த 6ம் திகதி திருக்கோவில் மற்றும் மட்டு சந்திவெளி பகுதிகளில் வைத்து சிஐடியினர் கைது செய்தனர்.



இவர்களுடன் இனிய பாரதியின் சகாக்களான முன்னாள் சாரதி செந்தூரன், திருக்கோவில் விநாயகபுரத்தைச் சேர்ந்த தொப்பி மனாப் என்றழைக்கப்படும் விக்கினேஸ்வரன், வெலிகந்தை தீவுச்சேனையைச் சேர்ந்த பாலிகிருஷ்ணன் சபாபதி மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த யூட் என அழைக்கப்படும் ரமேஸ்கண்ணா ஆகியோரை கைது செய்து விசாரணை மேற்கொண்டனர்.




இந்த விசாரணையின் அடிப்படையில் கடந்த 2009ம் ஆண்டு யூலையில் திருக்கோவில் விநாயகபுரத்தைச் சேர்ந்த 18 வயதுடைய மாணவன் பார்தீபன், 2006 டிசம்பர் 15ம் திகதி கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வந்த கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் எஸ்.ரவீந்திரநாத், 2010- ஜனவரி 26ம் திகதி ஊடகவியலாளர் பிரதீப் எக்நல கொடவை ஆகியோர் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சிஜடி யினர் கைது செய்யப்பட்டவர்களை குறித்த மயானத்துக்கு கடந்த இரு தினங்களாக அழைத்துச் சென்று புதைக்கப்பட்ட இடங்களை அடையாப்படுத்தினர். இதற்கமைய குறித்த மயான இடத்தை தோண்டி சோதனை செய்வதற்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் சிஜடியினர் அனுமதி கோரியதையடுத்து நீதவான் ஏ.எல்.எம்.றிஸ்வான் முன்னிலையில் ஏற்கனவே கைது செய்யப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த யூட் என அழைக்கப்படும் ரமேஸ்கண்ணா அடையானம் காண்பிக்கும் இடத்தை பைக்கோ இயந்திரம் கொண்டு பிற்பல் 2.00 மணிக்கு தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் போது அங்கு இதுவரை எந்தவிதமான உடற்பாகங்கள் மீட்கப்படவில்லை.

இதேவேளை அந்த பகுதியில் மக்கள் திரண்டு நிற்பதை காணக்கூடியதாக இருந்தது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

G. f[pe;jd;

# காணாமல் ஆக்கப்பட்டோர், கடத்தப்பட்டோர் புதைகுழிகளுக்குள் உள்ளார்கள் என்கிறார் கஜேந்திரன்




ஸ்ரீலங்கா அரசாங்கமானது தொடர்ச்சியாக கட்டமைக்கப்பட்ட இன அழிப்புகளை மேற்கொண்டு வந்து, 2009இல் அதன் உச்சக்கட்ட செயற்பாடாக சுமார் ஒரு லட்சத்து 46 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் ஸ்ரீலங்கா ஆயுதப்படையினராலே மிகக் கொடூரமாக கொன்றொழிக்கப்பட்டுள்ளார்கள் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

26ம் திகதி அன்றையதினம் செம்மணியில் இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்தும் கருத்துரைக்கையில்,

உணவுத்தடை மற்றும் மருந்து தடை என்பவற்றையும் ஆயுதமாக பயன்படுத்தி அந்த இன அழிப்பு அரங்கேற்றப்பட்டது. அதன் பின்னர் கிட்டத்தட்ட 1980 ஆம் ஆண்டுகளின் பிற்பாடு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பல இளைஞர்களும் யுதிகளும் ஸ்ரீலங்கா இராணுவத்தினராலும் அவர்களுடன் இணைந்து இயங்கிய துணை இராணுவ குழுக்களினாலும் கைது செய்யப்பட்டும், கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள்.

குறிப்பாக 1995 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்கு பிற்பாடு சந்திரிக்க அரசாங்கத்தினால் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் மூலம் யாழ்ப்பாணம் ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் 96 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் யுவாதிகளும் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோர் எல்லோரும் கொன்று புதைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

இப்போது செம்மணியில் 100க்கும் அதிகமான எலும்புக்கூடுகள் வெளி வந்திருக்கின்றன. இந்த புதைகுழியில் புதைக்கப்பட்டவர்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டும் கடத்தப்பட்டும் சித்திரவதைகளுக்கும் பாலியல் வல்லுறவுகளுக்கும் உட்படுத்தப்பட்டு கொன்று புதைக்கப்பட்டவர்கள் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

இந்த இனப்படுகொலைக்கும் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டுருக்கும் உள்ளகப் பொறிமுறை மூலம் எந்த விதமான நீதியும் கிடைக்காது என்பது தமிழ் மக்களுடைய உறுதியான நிலைப்பாடு. எனவே எமக்கு எதிராக அழைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். அது தொடர்பான தீர்மானமானது ஐநாவின் பொதுச்சபையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது எமது கோரிக்கையாக உள்ளது.

ஐநா மனித உரிமைகள் பேரவையில் இந்த பொறுப்பு கூறல் தொடர்பாக 2012 ஆம் ஆண்டில் இருந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வந்தாலும் அந்த தீர்மானங்களானது முற்றும் முழுதாக உலக விசாரணையை வலியுறுத்துகின்ற தீர்மானமாகவே இருந்து வந்திருக்கிறது. அதன் காரணமாக இந்த 15 வருடங்களில் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான நீதியும் கிடைக்கப் பெறவில்லை.

யுத்தம் நடைபெறுகின்றபோது இந்த இலங்கை அரசிற்கு முழுமையாக துணை நின்ற ஐநா, யுத்தம் நிறைவடைந்த பின்னர் அந்த இனவழிப்பை மேற்கொண்டவர்களிடமே பொறுப்பு கூறல் விவகாரத்தை ஒப்படைத்துக் கொண்டு வருவது என்பது ஏமாற்றுகரமான விடயம்.

பாதிக்கப்பட்ட தரப்பிலிருந்து சிலர் அந்த உலக விசாரணையை ஏற்றுக்கொண்டு வந்ததால் எமக்கு இன்று வரை நீதி கிடைக்காமல் இருக்கின்றது. காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வை பெறுவதற்கும் இந்த உள்ளக பொறிமுறை மூலம் தீர்வு பெறுவதற்கு ஒத்துக்கொண்டமையால் இன்று வரைக்கும் அவர்களுக்கான நீதியானது கிடைக்காமல் காணப்படுகின்றது.

ஆகவே இந்த உலக பொறிமுறை நாடகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். இந்த செம்மணி விவகாரத்தில் கூட மீண்டும் ஜனாதிபதியையே அதை விசாரிக்குமாறு கோரி உள்ளக விசாரணைகளுக்கு வாய்ப்பு கொடுக்கின்ற நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றது. அந்தத் தவறு இனிமேல் நடக்கக்கூடாது.


எங்களைப் பொறுத்தவரை பக்கச்சார்பற்ற ஒரு முழுமையான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். அது தொடர்பான ஒரு தீர்மானம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் எடுக்கப்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தலைவர், ஆணையாளர் போன்றவர்கள் இந்த பொறுப்பு கூறல் விவகாரமானது 15 ஆண்டுகள் தோல்வி அடைந்திருக்கின்றது என்ற விடயத்தை ஐ.நா செயலாளருக்கு தெரியப்படுத்தி, அவரிடம் இந்த விடயத்தை பாரப்படுத்தி மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்தப் போராட்டத்தின் குறிக்கோளாக இருக்க முடியும் என்றார்.




கனடிய செய்திகள்
Canadian News

# நமது எழுத்தாளர் தீபச்செல்வன் தனது எழுத்துப் பயணத்தில் பல இடர்பாடுகளை எதிர்கொண்டு, தொடர்ந்து ஈடுபட்டு வரும் ஒரு படைப்பாளி."

## கனடாவில் "சயனைட்" நாவல் அறிமுக விழாவில் அரசியல் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர் நிமால் விநாயகமூர்த்தி புகழாரம்





"இலங்கைத் தீவில் இருந்து எழும் எழுத்தாளர்கள் பலர், பல்வேறு கட்டுப்பாடுகளையும், அரசியல் மற்றும் சமூக நெருக்கடிகளையும் மீறி தங்கள் குரலை எழுப்பி வருகிறார்கள். அவர்களின் அனுபவங்களும் பார்வையும் அனைத்துலகத்திலும் உள்ள வாசகர்களை சென்றடைய வேண்டும் என்பதற்கு அப்பால் தாயகத்தில் அவர்கள் அனுபவிக்கும் சவால்கள் மற்றும் அரச பயங்கரவாதத்தின் மிரட்டல்கள் மற்றும் எச்சரிக்கைகள் ஆகியவற்றையும் தாங்கிய வண்ணம் உள்ளார்கள். இங்கு முக்கியமாக நமது எழுத்தாளர் தீபச்செல்வனும் இந்நெறியில் பல இடர்பாடுகளை எதிர்கொண்டு, எழுத்துப்பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் ஒரு முக்கியமான படைப்பாளி. எனவே புலம் பெயர் தமிழர்கள் அவரது படைப்பிலக்கியப் பணியை ஊக்குவிக்கும் வகையில் உதவிட வேண்டும்."

இவ்வாறு கனடா வாழ் அரசியல் மற்றும் சமூகச் செயற்பாட்டாளரும் கணக்காளருமான நிமால் நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் தெரிவித்தார்.

கடந்த 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று மார்க்கம் நகரில் அமைந்துள்ள கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெற்ற தாயக எழுத்தாளர் தீபச்செல்வன் அவர்களது "சயனைட்" என்னும் போர்க்கால நாவல் அறிமுக விழாவில் சிறப்புரையாற்றிய அவர் தெரிவித்தார்.

திரு. பொன்னையா விவேகானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த அறிமுக விழாவில் எழுத்தாளரும் கவிஞருமான சா.வே. பஞ்சாட்சரம் அவர்கள் நூலை வெளியீட்டு வைத்தார். எழுத்தாளரும் திரைப்பட இயக்குனரும் அரசியல் செயற்பாட்டாளருமான ரஞ்சித் அவர்களும் எழுத்தாளர் தீபச்செல்வன் தொடர்பான அறிமுக உரையை ஆற்றினார். விமர்சகர்களான "அன்பு" மற்றும் காலம் செல்வம் ஆகியோர் ஆய்வுரைகளுக்காக அழைக்கப்பெற்றிருந்தனர். இவர்களுள் விமர்சகர் "அன்பு" அவர்கள் நாவலை முற்றாக வாசித்த அனுபவத்தோடு தனது முழுமையான உரையை திறந்த மனதோடு வழங்கிச் சென்றார். எனினும் அவரது எதிர்மறையான விமர்சனங்கள் சபையோரை முகஞ்சுழிக்கச் செய்தன என்பது உண்மையே!. ஆனால் எழுத்தாளர் காலம் செல்வம் அவர்களது ஆய்வுரையை எதிர்பார்த்து காத்திருந்தவர்கள் ஏமாற்றம் அடைந்த வண்ணம் "இவர் "சயனைட்டை" கையில் கூட எடுத்திருக்க மாட்டார்" என்று தமது ஏமாற்றத்தைப் பகிர்ந்து கொண்டனர். நாவலின் பிரதிகளை பல இலக்கிய அன்பர்கள் விருப்புடன் வந்து பெற்றுச் சென்றனர்.

அங்கு திரு. நிமால் விநாயகமூர்த்தி தொடர்ந்து உரையாற்றுகையில், "கலையும் இலக்கியமும் ஒரு சமூகத்தின், மற்றும் ஒரு தேசத்தின் பண்பாட்டையும், மொழியையும், வாழ்வியலையும், வரலாற்றையும் வடிவமைத்து நிலைநாட்டும் முக்கியமான கூறுகளாக உள்ளன. அந்த வகையில், காலத்தின் சுவடுகளை பதிக்கும் படைப்பாளிகளின் எழுத்துப் பணிகளுக்கும், கலைஞர்களின் கலைப் பணிகளுக்கும் நாம் தார்மீக ஆதரவை வழங்குவதே ஒரு சமூகக் கடமையாகும்.

இலங்கை போன்ற நுட்பமான வரலாற்று பின்னணியைக் கொண்ட நாட்டில், இலக்கியங்கள் கடந்த கால அவலங்களின் சாட்சியாக மட்டுமின்றி, எதிர்கால நம்பிக்கையின் கனலாகவும் இருந்து வருவதை நாம் ஊக்கமளித்து இன்னும் படைப்புக்கள் வெளிவர உதவியாக இருக்க வேண்டும்..

அந்த அடிப்படையில், எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய சயனைட் என்ற நாவல் அறிமுக விழாவில் பங்கேற்பது எனக்கு மிகுந்த பெருமிதம் அளிக்கின்றது.

இந்நிகழ்வில் மட்டும் அல்ல் கடந்த ஜனவரி மாதம் 3ஆம் திகதி, தமிழ் நாட்டில் பிரசாத் லேப் எனும் மண்டபத்தில், தமிழ் நாட்டின் புகழ்பெற்ற ஓவியர் மருது தலைமையில் இந்த நாவல் வெளியிடப்பட்டது. அந்த விழாவில் பல பிரபல பேச்சாளர்கள் கலந்துகொண்டனர். எழுத்தாளர் தீபச்செல்வனும் உரையாற்றினார். அந்த அருமையான இலக்கிய நிகழ்வில் நானும் உரையாற்றியதையே நான் பெருமையாக நினைக்கிறேன்.

அதுபோன்று, தீபச்செல்வன் போன்ற படைப்பாளிகளின் பணியுக்கும் நாம் உறுதியான ஆதரவை தொடர்ந்தும் வழங்குவதன் மூலம் நாம் எமக்கான வாழ்வியலையம் வரலாறையம் பிரதிபலிக்கும் செழுமையான இலக்கியங்களை உருவாக்கமுடியும்.

இவ்வளவு சவால்களும், இடர்களும் நிறைந்த சூழ்நிலையிலிருந்து உருவாகும் ஒரு இலக்கியப் படைப்பு சாதாரண நிகழ்வல்ல. இது ஈழத் தமிழர்களின் உணர்வுகளுக்கும் வரலாற்றுக்கும் இடையே நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்த வல்லன.

எமது இலக்கியங்களும் கலைகளும் நீதிக்கான போரில் நெஞ்சோசையாக இருக்கின்றன. அவை எங்களது உரிமைக்கும் விடுதலைக்குமான குரலை எழுப்புகின்றன." என்று தனது உரையை நிறைவு செய்தார்.


இறுதியில் கிளிநொச்சியிலிருந்து எழுத்தாளர் தீபச்செல்வன் தனது பதிலுரையை இணைய வழி ஊடாக வழங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**— சத்தியன் — கனடா**

















## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:


டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca




11/24





Toronto சிட்டி கவுன்சிலர்

## PAUL AINSLIE

WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

## HELP IS AVAILABLE

**வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.**

குறைந்த கட்டனத்தில் வீட்டுவசதி
**விலங்கு சேவைகள்**
உயர்மாடி கட்டட சட்டங்கள்
**கட்டட அனுமதி பத்திரங்கள்**
பிள்ளை பராமரிப்பு சலுகை
**அவசர வீட்டு வசதிகள்**
தீயணைப்பு சேவைகள்
**கழிவுப் பொருட்கள் சேவை**
நூலகச் சேவை
**மாநகரத் தேர்தல்**
மாநகர அனுமதியும் சட்டங்களும்

**Ontario Works**
வாகனத் தரிப்பிடங்கள்
**பூங்காக்கள்**
காவல் துறை
**பொதுச் சுகாதாரம்**
வீதிகள்
**ஆதன வரிகள்**
பொதுப் போக்குவரத்து
**மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்**
மரங்கள்
**நீர் விநியோகம்**

**நியமன அலுவலகம்**
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

**ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்**
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
Ward 24 Scarborough-Guildwood
@cllrainslie
www.paulainslie.com
@Ainslie_Ward24
Paul Ainslie (City of Toronto)

**www.paulainslie.com 416-396-7222**



## VILLAGE NISSAN

**தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்**



*DAA ROTATION

**25 SENTRA**
*S CVT* ULTRA-LOW
**$69** WEEKLY | **39** MOS. LEASE $2,695 Down
+$1,000 60th Anniversary Cash



*DAA ROTATION

**25 KICKS PLAY**
*S* ULTRA-LOW
**$69** WEEKLY | **39** MOS. LEASE $2,192 Down
+$1,000 60th Anniversary Cash




*DAA ROTATION

**25 ROGUE**
*S AWD*
**0.99%** | **30** MOS. LEASE
+$1,000 60th Anniversary Cash



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT
905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com





Tamil One TV HD
Reflection of Canadian Tamils
SV MEDIA
PRESENTED BY
Muhurtham Jewels
POWERED BY
PHYSIO KING
CO-PRESENTED BY
ROYAL LEPAGE ignite
MEGA BLAST
2025 CELEBRATING SOUTH ASIAN TASTE & CULTURE
VENUE
SHEPPARD AVENUE EAST,
DEAN PARK ROAD TO MEADOWVALE
Sheppard Avenue East
Hedge End Rd
Gatineau Hydro Corridor Trail
Sheppard Ave E
Dean Park Road
Braymore Blvd
Fireside Dr
Meadowvale
2-DAY STREET FESTIVAL
AUGUST 9TH & 10TH
FREE EVENT
For more info Hotline:
+1 416 389 7078
FREE PARKING
GT Brokers Protect You & Your Family
AERO COURIER Fast & Secure World Wide Service
INK DRIP
GUNAAMS SUPERMARKET
THE DESIGN WOLF.COM

கனடிய செய்திகள்
Canadian News

# கொட்டும் மழையிலும் "விழித்தெழு தமிழா" செம்மணி எழுச்சி நிகழ்வில் கண்ணீர்ச் சொட்டுக்களோடு கடைசி வரை நின்ற கனடியத் தமிழ் உறவுகளும் உணர்வாளர்களும், அரசியல் பிரமுகர்களும்.....



26-07-2025 சனிக்கிழமையன்று மாலை 6.00 மணிக்கு கனடா ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள ALBERT CAMPBELL SQUARE திறந்த வெளியரங்கில் யாழ்ப்பாணம் செம்மணி புதைகுழிகள் மற்றும் கண்டெடுக்கப்பட்ட எம் உறவுகளின் எலும்புக் கூடுகள் மற்றும் இலங்கை அரசின் கடந்த காலம் தொடக்கமான இனப்படுகொலைகள் ஆகிய காட்டுமிராண்டிச் செயல்களை சர்வதேசம் கண்டிக்கவும்
தகுந்த பொறுப்புக் கூரல்களை வலியுறுத்தியும் BEHIND ME FOUNATION அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பெற்ற "விழித்தெழு தமிழா" என்று விழிப்புணர்வு எழுச்சி நிகழ்வின் ஆரம்பத்திலிருந்தே மழை கொட்டத் தொடங்கியது. எனினும் கொட்டும் மழையிலும் "விழித்தெழு தமிழா" செம்மணி எழுச்சி நிகழ்வில் கண்ணீர்ச் சொட்டுக்களோடு கடைசி வரை நின்ற கனடியத் தமிழ் உறவுகள். மாவீரர்களின் குடும்பங்களின் உறுப்பினர்கள். உணர்வாளர்கள். அரசியல் பிரமுகர்கள் மற்றும் கலைஞர்கள் கல்வியாளர்கள் மற்றும் அனைவருக்கும் BEHIND ME FOUNATION, BEHIND INTERNATIONAL MEDIA ஆகிய அமைப்புக்களின் தலைவரும் நிறைவேற்றுப் பணிப்பளருமான கனேந்திரன் செல்வராஜா அவர்கள் நன்றி தெரிவித்துள்ளார்.

மேற்படி செம்மணி புதைகள் சார்ந்த எழுச்சி நிகழ்வான "விழித்தெழு தமிழா" சரியாக 6.30 மணிக்கு கனடிய மற்றும் தமிழீழக் கொடிகள் ஏற்றப்பெற்ற நிகழ்வுகளோடு ஆரம்பமானது. கனடிய தேசியக் கொடியை மார்க்கம் - தோர்ண்ஹில் தொகுதிக்கான ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களும். தமிழீழத் தேசியக் கொடியை ஸ்காபு றோ விஜயா நகை மாளிகை உரிமையாளர் ரூபன் அவர்களும் ஏற்றி வைத்தார்கள்.

நிகழ்ச்சிகளை தமிழில் கிருஸ்ணா அவர்களும் ஆங்கிலத்தில் தனேஷ்









அவர்களும் தொகுத்து வழங்கினார்கள்.

மேற்படி நிகழ்வை ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள ALBERT CAMPBELL SQUARE திறந்த வெளியரங்கில் நடத்துவதற்கு பக்கபலமாக விளங்கியவர்களில் மார்க்கம் - தோர்ண்ஹில் தொகுதிக்கான ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் முக்கிய பங்கு வகித்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும், அழைக்கப்பெற்றிருந்த அனைத்து மத்திய பாராளுமன்ற உறுப்பினர்கள். மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள். மாநாகரசபை அங்கத்தவர்கள் ஆகிய அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டு எமது உறவுகள் தாயகத்தில் அனுபவித்த துயரங்கள் மற்றும் அடக்கு முறைகளுக்கும் தங்கள் கவலைகளைப் பகிர்ந்து கொண்டும் எமது விழிப்புணர்வு போராட்டங்களுக்கு தங்கள் ஆதரவையும் தெரிவித்து உரையாற்றினர்.

தொடர்ந்து இலங்கை அரசினதும் அரச படைகளினதும் அடக்கு முறைகள் மற்றும் இனப்படுகொலைகள், தமிழ் மக்களது சொத்துக்களைச் சூறையாடிமை தொடர்பான பல மேடை நிகழ்ச்சிகள் உணர்வுபூர்வமாக மேடையில் இடம்பெற்றன. அறிவிப்பாளரும் கலைஞருமான கிருஸ்ணா அவர்கள் வழங்கிய எமது துயரங்களின் சமர்ப்பணமாக விளங்கிய நிகழ்வும் கணபதி ரவீந்திரன் - ரூபி யோகதாசன் ஆகியோர் மற்றும் துணை நடிகர்கள் வழங்கிய நாடகம் ஆகியவையும் நடனங்களும் உரைகளும் எமது வலிகளை தேற்றுகின்றனவாகவும். எமது தவறுகளை திருத்திக் கொள்ளும் வகையான கருத்துக்களையும் எடுத்து வந்தன.

நிகழ்வு இடம்பெற்ற ALBERT CAMPBELL SQUARE திறந்த வெளியரங்கின் மேடைக்கு முன்பாக செம்மணிப் புகைகுழிகளுக்கு ஒப்பான







மண் நிரப்பப்பெற்று அங்கு செயற்யான எலும்புக்கூடுகள் காட்சிப் படுத்தப்பெற்று கலந்து கொண்ட எமது கனடிய உறவுகளும் அரசியல் பிரமுகர்களும் உள்ளம் நொடிந்து போகும் வகையில் அந்த இடம் விளங்கியது என்றால் அது மிகையாகாது.

விழா தொடங்கி இறுதிவரையும் மழை குறைவதும் பொழிவதுமாக இருந்தாலும் நூற்றுக்கணக்கான உணர்வாளர்கள் அங்கு தங்கள் குடும்ப சகிதம் வந்து தொடர்ச்சியாக இறுதிவரை அகலாமல் "விழித்தெழு தமிழா" எழுச்சி நிகழ்வை உணர்வோடு அனுபவித்தார்கள்.

கவிஞர் பசுபதி சயந்தன் அவர்கள் உணர்வுபூர்வமான கவிதையொன்றை வழங்கி எமது மண்ணின் அவலங்களைச் சந்தங்களோடு சுட்டிக்காட்டினார்.

கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கனடிய பல்லினப் பத்திரிகையாளர்கள் கழகத்தின் சிரேஸ்ட உப தலைவருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்களின் உரையும் அங்கு இடம்பெற்றது. தொடர்ந்து BEHIND ME FOUNATION, BEHIND INTERNATIONAL MEDIA ஆகிய அமைப்புக்களின் தலைவரும் நிறைவேற்றுப் பணிப்பளருமான கனேந்திரன் செல்வராஜா அவர்கள் உரையாற்றினார். அவரது முழுமையான உரையானது ஒரு மேற்படி "விழித்தெழு தமிழா" எழுச்சி நிகழ்வு தொடர்பான விளக்கவுரையாகவும் அமைந்தது.

அத்துடன் எமது கனடிய தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட வேண்டிய சிந்தனை மாற்றங்கள் தொடர்பான ஆலோசனை வழங்குவதாகவும் இருந்தது.

இந்த விழித்தெழு தமிழா நிகழ்வுகள் திட்டமிட்ட வகையில் இடம்பெற பல தொண்டர்களும் நண்பர்களும் பக்கபலமாக இருந்தார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

*செய்தி: சத்தியன்*

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# குரலற்றவர்களின் குரல் அமைப்பு விடுத்த கோரிக்கையின் விளைவாக தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் நீதி அமைச்சருடன் சந்திப்பு!

- பு.கஜிந்தன்



நீதி அமைச்சர் ஹர்ஷ நானயக்கார அவர்கள் கோரிக்கைகளை, தான் "காதுகளால் கேட்கவில்லை, இதயத்தால் கேட்கிறேன்" என்று குறிப்பிட்டு, சட்ட கட்டமைப்பிற்குள் இருந்து இந்த பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி.

கொழும்பு நீதி அமைச்சின் அலுவலகத்தில், நீதி அமைச்சர் ஹர்ஷ நாணயக்காரவுக்கும் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் பிரதிநிதிகள், சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோருக்குமிடையே 30ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

இச்சந்திப்பில், 15 முதல் 30 வருடங்கள் இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் குடும்ப உறுப்பினர்கள், தங்கள் உறவினர்களின் நீண்டகால சிறைவாசம் காரணமாக தாங்கள் எதிர்கொண்ட உளவியல், சமூக மற்றும் பொருளாதார சவால்களை கண்ணீருடன் எடுத்துரைத்தனர். தங்களின் அன்புக்குரியவர்களை விரைவாக விடுதலை செய்யுமாறு அமைச்சரிடம் கூட்டாக கோரிக்கை விடுத்தனர்.

இலங்கையின் இன முரண்பாடுகளால் உருவான போரின் விளைவுகளான தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில், மனிதாபிமான அடிப்படையில் தீர்வு காண்பது அவசியமாகும். கடந்த காலத்தில், இலங்கை - இந்திய ஒப்பந்தம், விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள், ஜே.வி.பி.க்கு பொது மன்னிப்பு, மற்றும் போருக்கு பின்னர் 12,000 விடுதலைப் புலிகள் விடுவிக்கப்பட்டமை போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு, பல வருடங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளில் விடுதலையினை மனிதாபிமான ரீதியில் முன்னெடுக்குமாறு குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை முன்வைத்தது.


மேலும் பயங்கரவாத தடைச்சட்டம் ஊடாக கைது செய்யப்பட்டவர்களின் விடுதலை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையின் நீதி அமைச்சர் ஹர்ஷ நானயக்கார அவர்கள் கோரிக்கைகளை, தான் "காதுகளால் கேட்கவில்லை, இதயத்தால் கேட்கிறேன்" என்று குறிப்பிட்டு, சட்ட கட்டமைப்பிற்குள் இருந்து இந்த பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக கூறினார். அரசியல் கைதிகளின் பொது மன்னிப்பு சார்ந்த விடயங்கள் ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் வருகின்றமையால், ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று தொடர்சியான நடவடிக்கைகளை மேற்கொள்ள அமைச்சர் உறுதியளித்தார்.

இந்த சந்திப்பானது கடந்த ஜனவரி 2025 முதல் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உடனான எழுத்துமூல கோரிக்கு அமைவாக இடம்பெற்றது.

# தாய் மண்ணில் வாழ்ந்தபடி நெருக்கடிகளுக்கு மத்தியில் தொடர்ந்து எழுத்தின் வழி தனது மேன்மையான பங்களிப்பை ஆற்றும் தீபச்செல்வனுக்கு நன்றியும் பாராட்டுகளும்

## எழுத்தாளர் தீபச்செல்வனின் " சயனைட்" என்னும் போர்க்கால நாவல் தொடர்பான கனடிய விமர்சகர் "அன்பு" அவர்களின் பார்வை



309 பக்கங்களும் 40 அத்தியாயங்களும் கொண்ட சயனைடு என்ற இந்நூல், இன அழிப்புப்போரால் ஏதோவொரு வகையில் நாளாந்தம் பாதிக்கப்பட்டு தனது பதின்ம வயதில் கண்ணெதிரே தந்தையையும் பறிகொடுத்து தனது மக்களின் விடுதலைக்குப் போராடுவதென்பதே நிரந்தர வி-டிவைத் தரும் என்பதை முழுமையாக நம்பித் தன்னை அதற்காக அர்ப்பணித்துப் போராடச்செல்லும் ஒரு இளைஞனைப் பற்றிய கதை.

அப்படிப் போராடச் செல்கிறவன் ஒரு முனையில் எதிரியினை எதிர்த்துப் போராடுகிறான். மறு முனையில் மக்கள் முன்னேற்றம், சமூக சேவைகள், கல்வி, நலத்திட்டங்கள் போன்றவற்றில் முனைப்போடு செயற்பட்டு சமூக மேம்பாட்டுக்கும் உழைக்கிறான். தன் சமூகத்தின் எதிர்காலத்திற்கு ஒரு நம்பிக்கை ஒளியாக இருக்கிறான்.

சண்டைக்களங்களிலும் தனது அர்ப்பணிப்பை அயராது செய்கிறான். வீரத்தோடு எதிரியைப் பொரு-துகிறான். போர்முனைத் தளபதியாக, அரசியல் பிரிவுப்பொறுப்பாளராக எனப் பல வழிகளிலும் எம் மக்களின் விடிவு ஒன்றே இலட்சியம் என உழைத்து மக்கள் மனங்களில் பெருமதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய உயரிய இடத்தைப் பெறுகிறான். இயக்கத்தில் ஒரு முன்னுதாரணமாக, மக்களால், தளபதிகளால், சகபோராளிகளால் எனப் பலராலும் மெச்சப்படுபவனாக வலம் வருகிறான்.

அதே போராளி 2009 இன அழிப்புக்குப் பின்னர் காட்டிக்கொடுக்கப்பட்டு கைதாகிறான். வதைக்கப்படுகிறான். எல்லாவற்றுக்கும் மேலாக தோற்றவன் என்ற காரணத்தால் ஆக்கிரமிப்பு இராணுவத்தால் இழிவு செய்யப்படுகிறான். தடுப்பில பல ஆண்டுகளைக் கழிக்கிறான். சித்திரவதைகளாலும், மன உளைச்சலாலும உடல்ரீதியாகவும் உள ரீதியா-கவும் மிகவும் பாதிக்கப்படுகிறான்.

இந்தப் பின்புலத்தில் சயனைடு என்ற இந்த நூலின் தலைப்பின் வழி ஆசிரியர் சொல்லவருவது எந்த நஞ்சு என்ற கேள்வி இங்கு எழுகின்றது. கதை நாயகன் ஒரு போராளி. அவன் போராளியாகும்போது இயக்க விதிக்கேற்ப கழுத்தில் பெருமையோடு ஏற்று அணிந்தது சயனைடு. களத்தில் போராடியபோது ஒரு நாள் அந்த சயனைடினை கடிக்கும் நிலைக்கும் சென்றுள்ளான். அது அப்போது உயிரை எடுக்காது போயினும். நஞ்சை உமிழ்கிறது. அப்படியாக அது உமிழ்ந்த நஞ்சு குறித்து இந்த நாவல் பேசுகிறதா?,

அல்லது

தடுப்புமுகாமில் நச்சு ஊசி செலுத்தியதால் அவனும் அவன் போன்ற போராளிகளும் உடலளவில் அனுபவிக்கும் உடல் வாதைகள், அதனால் அவர்கள் இரத்தத்தில் தோய்ந்த நஞ்சு குறித்து இந்த நூல் பேசுகிறதா?

குறிப்பாக கீழே சொல்லப்படும் பகுதி கதை நாயகனின் இது குறித்த ஆற்றாமையைப் பதிவு செய்கிறது.

"நஞ்சூறிய அவன் உடல் வியர்த்தது. எங்களுக்குத் தந்தது புனர்வாழ்வா அல்லது படிப்படியான மரணமா?"

"இந்த அரசு ஒரு இனத்தையும் அதின்ர போராட்டத்தையும் அழிச்சுத் துடைக்க எங்களுக்கு நஞ்சுச் சோறு தந்திச்சுது. நஞ்சு ஊசியளை ஏத்திச்சுது."

ஆக இந்த புனர்வாழ்வு என்ற பெயரில் இந்த ஆட்சி அமைப்பு தந்த படிப்படியான மரணத்தினை ஏற்படுத்தவல்ல நஞ்சு குறித்து இந்த நூல் பேசுகி-றதா?

அல்லது

ஒரு பெரிய பொறுப்பில் பலர் போற்றப்படும் நிலையில் முழு அர்ப்பணிப்புடன் மக்களுக்காகச் செயற்பட்ட அவனை போரின் பின்னரான காலம் - உடல் உள அளவில் உருக்குலைக்க, குடும்பமும் சமூகமும் தூர வைக்க,

எழுத்தாளரின் வார்த்தைகளில் கதைநாயகனின் மனக்குமுறலாக சொல்வதானால்,

"நான் இப்ப இயக்கம் இல்லைத்தானே. செல்லாக்காசாப் போனேன்"

இந்த வரிகளில் புறக்கணிப்பு என்னும் நஞ்சு சொல்லப்படுகிறது. ஆக சயனைடு என்ற தலைப்பு இந்த புறக்கணிப்பு என்னும் நஞ்சை சொல்கிறதா?

அல்லது இறுதியாக

ஆக்கிரமிப்பு இராணுவம் வெற்றி பெற்ற மமதை நோயால் தொடர்ந்து தோல்வி அடைந்தவனை இழிவு செய்ய வேண்டும் என்பதற்காகவே துரத்தி துரத்தி துன்புறுத்துகிறது. தனது கடின முயற்சியால் உழைப்பால் மீண்டு விட முடியாமல் இது அவனை வாட்டுகிறது. அவனது மனதிடத்தைக் குறைத்திடும் நஞ்சாகிறது. ஆக இந்த நாவல் குறிப்பிடும் சயனைடு அந்த மனதிடத்தைக் குறைத்திடும் நஞ்சா?

இவற்றுள் - இந்த நாவல் பேசும் நஞ்சு எது? என்ற தெரிவினை வாசகர் முடிவுக்கே விட்டுவிடுகிறார் நூலாசிரியர்.

நூலின் உள்ளடக்கத்தைப் பார்த்தோமானால் இந்த நாவல், ஒரு போராளியின் அர்ப்பணிப்பையும் அதன் பொருட்டு அவர்கள் அடையும் குடும்ப, சமூக இழப்புகளையும் விவரிக்கிறது. கதை நாயகன், தனது மக்களின் விடுதலைக்காக தன்னலம் மறந்து போரா-டியவர்.

பின் கைதுசெய்யப்பட்டு தடுப்பு முகாமில் தள்ளப்பட்டவர். அவரது காலம் நான்கு சுவர்களுக்குள் அடக்கப்படும்போது சிறைக்கு வெளியே காலம் ஓடிக்கொண்டேதான் இருக்கிறது. அவர் வெளியே வரும் போது, உலகம் மாறி விட்டிருக்கிறது.

போராட்ட இயக்கம் முற்றிலும் மறைந்து விட்டது, ஆயுதப் போராட்டம் மௌனித்துவிட்டது. சிலர் ஆட்சி அமைப்புடன் ஒத்துழைக்கின்றனர்.

தமிழீழ அரச நிர்வாகக் கட்டமைப்புகள் இருந்த இடங்கள் எல்லாம் இராணுவ மையமாக இருந்தது. எழுத்தாளரின் வார்த்தைகளில் சொல்வதானால் "சூரியன் ஒளிர்ந்த அடிவானில் இப்போது இருள் அடர்ந்திருந்தது".

சிறைக்குச் செல்லும் போது குழந்தையாக இருந்த மகள், வளர்ந்து விட்டாள். அவளால் அவரை அடையாளம் காண முடியவில்லை.

"யார் இந்த மாமா? என்று அவள் கேட்ட தருணம், மீண்டும் எழுத்தாளரின் வார்த்தைகளில் சொல்வதானால் "பெருமலை உயரத்திலிருந்து விழுந்த மண்குடமாய் நொறுங்கியது அவன் மனம்".

அதேசமயம், அவள் கேட்கும் "இயக்கம் என்றால் என்ன?" என்ற கேள்வி அவரது வாழ்க்கையையே கேள்விக்குறியாக்குகிறது.

கதை நாயகன் போன்ற போராளிகள் சிந்திய குருதி, வீரம், தியாகம், கொல்லப்பட்ட உயிர்கள், அனைத்தும் மறக்கப்பட்ட கதையாகிவிட்டது என்பதை இந்த உரையாடல் உணர்த்துகிறது.

இது வெறும் ஒரு குடும்பத்தின் உரையாடல் அல்ல. இது ஒரு சமூகம், காலச்சுழற்சியில் தங்கள் போராளிகளை, தியாகங்களை, வரலாற்றை மறந்துவிடும் யதார்த்தத்தைப் பிரதிபலிப்பதாய் அமைகிறது. இங்கு அந்த மகள் கேட்ட கேள்வி ஒரு சமூகவியல் தாக்கம்.

ஒரு சமூகத்தின் நினைவில், போராட்டத் தியாகங்கள் எவ்வளவு காலம் வாழும்? ஒரு தலைமுறை மறந்துவிட்டால், அந்த விடுதலை இயக்கத்துக்கு, போராட்டத்துக்கு பெறுமானமுண்டா? இதுபோன்ற ஆழமான கேள்வியை எழுப்புகிறது இவ்வுரையாடல்.

இந்த தந்தை-மகள் சந்திப்பு, காலத்தின் சீரழிவு, வரலாற்றின் பரிதவிப்பு. நாவலின் மிக வலுவான தருணமாக இது அமைந்திருந்தது.

"பொறுப்பாளரின்ர காதலி, தளபதியின்ர மனுசி எண்டு சொல்லுறது எனக்குப் பெருமைதானே?" "உங்களுக்காக எத்தனை யுகமும் நான் காத்திருப்பேன்", என்று ஒரு பொழுதில் சொன்ன துணைவி கதைநாயகன் தடுப்பில் இருந்து மீண்டபோது "நீங்கள் எனக்கு வேணாம், என்னை விட்டுவிடுங்கோ" என்று சொல்கிறாள்.

"நான் இப்ப இயக்கம் இல்லைத்தானே. செல்லாக்காசாப் போனேன்" என்று கதைநாயகன் சொல்வதில் காலச்சுழற்சியின் வேதனை, இனத்தின் சமூகத்தின் தோல்வி கொப்பளிக்கிறது.

இந்நூலாசிரியர் அடிப்படையில் ஒரு கவிஞர். கவிஞருக்கே உரிய விவரிப்புகளும் படிமங்களும் நூ லின் பல இடங்களிலும் விரிந்து கிடந்தன. அதுவும் தாய் நிலத்துக்கே உரிய பெருமையோடு, போர்ச் சூழலுக்கே உரிய தனித்துவத்தோடு இருந்தன.

எடுத்துக்காட்டுகளாக, "தரையிலவன் சிறகு முளைத்த வான்புலியைப் போலப் பறக்கத் தொடங்கினான். அவன் ட்ரக் கடலில் கடற்புலிப் படகுபோல விரைந்தது".

"கூந்தலில் கடலைச்சூடியிருந்தாள். விளக்கொளியில் தாய்நிலமென அவளது முகம் ஒளிர்ந்தது"

"மனம் கனத்தாலும் பார்வையோ கந்தகக் காயத்தில் மருந்தெனப் படர்ந்தது".

"வானம் எனப்படுவது தீப்பிழம்பின் முகில்கள் என்றாயிற்று"

"வானம் பெருங்காயத்துடன் கிடந்தது".

"மழையைக் கிழித்தொரு பறவை எழுந்தது"

"கனவு முட்டிய நெஞ்சு கல்லாய் உறைந்திற்று"

இப்படி பல அழகிய, மெல்லிய வாசகர் ரசிக்கக்கூடிய விவரிப்புகளை நூலெங்கும் காணக்கூடியதாக இருந்தது.

எழுத்தாளர் கதை நாயகன் மூலம் ஆக்கிரமிப்பாளர்களை நோக்கியும் சில கேள்விக்கணைகள், கருத்துக்களை வைக்கிறார். இந்நாவல் மொழிபெயர்க்கப்படும் பட்சத்தில் இவ்வரிகள் பெறுமானம் பெறும்.

எடுத்துக்காட்டாக தடுப்பில் இருந்து கதை நாயகன் தனது மனக்கிடக்கையை வெளிப்படுத்துவதாக பின்வரும் வரிகள் சொல்லப்படுகிறது.

"போராட்டம் முடிந்தது எண்டு நினைச்சு இப்படி சித்திரவதை செய்யிறாங்களா? முடியேல எண்டு நினைச்சு சித்திரவதை செய்யிறாங்களா?"

மற்றும் தடுப்பு முகாமில் இருந்து வெளிவந்தபின்னும் தொடரும் இராணுவ அச்சுறுத்தல்களுக்குப் பதில் சொல்வதாக "தமிழீழம் அமையிறதும் அமையாமல் இருப்பதும் இனி உங்கட கையில்" என்று சொல்வதாக அமைகிறது.

அடுத்து நூலில் அவதானிக்கக் கூடியதாய் இருந்த மற்றொரு விடயத்தையும் இங்கு சொல்லியாக வேண்டும்.

அது - குழந்தைகள் சன்னங்களோடு விளையாடுதல், செல் கோதுகள் சன்னங்களை பொறுக்கி விற்றல், இராணுவம் - புலிகள் விளையாட்டு, இது போன்ற போர்க்காலச் சூழலில் வளர்ந்தவர்களுக்கே தெரிந்து பழகிய தனித்துவமான அவதானிப்புகள் குறித்தும் இந்நூல் பேசுகிறது.

மற்றும் தமிழ் ஈழ நிழல் அரசின் நிறுவனங்கள், நிர்வாகக் கட்டமைப்புகள் குறித்தும் பதிவு செய்யப்பட்டுள்ளது. சில இடங்களில் வேண்டுமென்றே திணிக்கப்பட்டவையாகத் தோன்றினாலும் கதையில் இதனைப் பதிவுசெய்ய எடுத்த முயற்சி வரவேற்கப்படவேண்டியதே.

309 பக்கங்கள் கொண்ட இந்த நாவலின் குறிப்பிடத்தக்க அம்சம் என நான் கருதுவதும் குறைபாடு என நான் கருதுவதும் ஒரு வி'யத்தைத்தான். அதாவது அதுவே பாராட்டப் படவேண்டியதும் அதுவே குறையாகவும் இருந்தது என்று சொல்லலாம்.

அது என்னவென்றால் பல்வேறு கதாபாத்திரங்களைச் சேர்ப்பதற்கான எழுத்தாளரின் முயற்சி. கதாபாத்திரங்களாக வரும் பலரும் வரலாற்றில் உண்மையில் வாழ்ந்தவர்கள். பெயர் வேறுபட்டிருந்தாலும் அவர்களது வாழ்க்கையும் வீரச் செயல்களும் உண்மையிலேயே நடைபெற்றவைதான்.

அந்த வரலாற்றுப் பாத்திரங்களின் தியாகங்களையும் பங்களிப்புகளையும் அங்கீகரித்து, அவற்றை மறக்காமல் நினைவுகூரச் செய்வது போற்றக்கூடியதுதான். பல வரலாற்று தகவல்களும் நபர்களும் சேர்க்கப்படுவது என்பது கதையின் நம்பகத்தன்மையையும் ஆழத்தையும் அதிகரித்து வாசகர்களுக்கு வரலாற்றுப் பின்னணியை விரிவாக புரிந்து கொள்ளவும் துணை புரிகிறது.

ஆனால் அதே வேளை இது கதையின் மையக்கருத்தை மங்கவைக்கும் வகையிலும் செயல்படுகிறது. தொடர்ச்சியாக புதுப் பாத்திரங்களை அறிமுகப்படுத்துவது - அதில் பலர் கதையின் மையக்கருவுக்கு முக்கியமில்லாதவர்கள் என்பது வாசகர்களை கதை மேலான உணர்வுப் பிணைப்பைத் தடுக்கிறது.

கதையின் போக்கில் கதாபாத்திரங்கள் வகிக்கப்போகும் பங்கு என்பதற்கமைய கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்தியிருக்கலாம். அந்த அறிமுகங்களிலும் கொஞ்சம் மெனக்கெட்டிருக்கலாம்.

பல உண்மைச்சம்பவங்களை வரலாற்று வீரர்களை அவர்கள் குறித்த சம்பவங்களைப் பதிவு செய்ய வேண்டும் என்ற தவிப்பில் பல கதாபாத்திரங்கள் சடுதியாக திணிக்கப்பட்டுள்ளது கதையின் போக்கில் இருந்து தள்ளிப்போவதாகத் தோன்றியது.

மேலும், வரலாற்று விவரங்களை அடிக்கடி சேர்ப்பது, இயல்பாக கதையில் பின்னிப் பொருந்தாமல், கதையின் முக்கியக் கருவிலிருந்து கவனத்தை விலக்குகிறது. இன்னும் சொல்லப்போனால் கதையின் ஓட்டத்தைக் குறைக்கிறது.

எழுத்தாளர் சற்றே கட்டுப்பாட்டுடன் கதாபாத்திரங்களின் எண்ணிக்கையை குறைத்து, கருப்பொருளை நெருக்கமாக வைத்து, ஒரு சில முக்கியமான பாத்திரங்களை வரலாற்றுப் பின்புலத்துடன் கதைச் சூழலுடன் இணைத்திருந்தால், கதையின் மையமான செய்தி மேலும் தெளிவாக வெளிப்பட்டிருக்கலாம்.

(தொடர்ச்சி 17ம் பக்கம்)



# சிறீதரன் எம்.பி.க்கு பூரண ஆயுள்...நித்தம் கண்டம்

**"சிறீதரன் எம்.பி.யை தமிழரசிலிருந்து வெளியேற்றிவிட வேண்டும். அதன்மூலம் அவரின் எம்.பி. பதவியை பிடுங்க வேண்டும் என்பதில் ஒரு அணியினர் தீவிரமாக நிற்பதற்கு சுமந்திரன் அந்த எம்.பி. பதவி மூலம் பாராளுமன்றம் செல்ல வேண்டும் என்ற திட்டம்தான் காரணமா..?"**

— பாலா

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக என்று சிவஞானம் சிறீதரன் வாக்கெடுப்பு மூலம் பொதுக்குழுவினால் தெரிவுசெய்யப்பட்டாரோ அன்று அவருக்கு பிடித்த "சனி" இன்றுவரை சிறீதரனை விடாது துரத்தி வருகின்றது. ஆனால் "மக்கள் பலம்" என்னும் பரிகாரத்தினால் சனியின் உக்கிர பார்வையிலிருந்து சிறீதரன் இரு கண்டங்களிலிருந்து தப்பி ஆலமரம் போல் அசையாது நிற்கும் நிலையில் அட்டமத்து சனியாக விட்டேனா பார் என்ற வகையில் தற்போது மூன்றாவது கண்டம் சிறீதரனை விரட்டத் தொடங்கியுள்ளது.

தமிழரசுக்கட்சியின் தலைவராக பொதுக்குழுவினால் தெரிவு செய்யப்பட்ட சிறீதரனை சட்ட சதியினால் அப்பதவியை ஏற்கவிடாது தடுத்தவர்கள் அவரை தொடர்ந்தும் கட்சியில் வைத்திருந்தால் தாம் நினைத்தவற்றை செய்யமுடியாது என்பதனால் அவரை கட்சியிலிருந்து வெளியேற்ற முதலில் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை சிறீதரன்
ஆதரித்தமையை சாட்டாக வைத்து "சிறீதரன் கட்சிக்கு கட்டுப்படவில்லை, தலைமையின் முடிவுக்கு முரணாக செயற்படுகின்றார் ஆகவே அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்ற சதியை முன்னெடுத்தனர்.ஆனால் சிறீதரனின் இவ்வாறான நிலைப்பாட்டிற்கு மக்கள் ஆதரவும் கட்சிக்குள் தமிழ் தேசிய உணர்வாளர்களின் ஆதரவும் இருந்ததால் அவருக்கு எதிராக உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியவில்லை. இது சிறீதரனுக்கு ஏற்பட்ட முதல் கண்டம்.

முதல் கண்டத்திலிருந்து தப்பிய சிறீதரனை பாராளுமன்றத் தேர்தலில் எப்படியாவது தோற்கடித்து அவரின் மக்கள் செல்வாக்கை இல்லாமல் செய்து அதன்மூலம் அவரை கட்சியிலிருந்து வெளியேற்றத் திட்டமிட்ட கட்சியில் ஒரு அணியினர் எடுத்த அடுத்த சதிதான் "சிறீதரன் மதுபானசாலைக்கான அனுமதிகளை ரணில் அரசிடமிருந்து அரசியல் இலஞ்சமாக பெற்றுள்ளார்" என்ற குற்றச்சாட்டு. இந்த குற்றச்சாட்டை தீவிர பிரசாரமாக தமது
விசுவாசிகள் மூலம் அந்த அணியினர் முன்னெடுத்தனர். ஆனால் "நான் மதுபான சாலைக்கான அனுமதி பெற்றதை நீங்கள் நிரூபித்தால் நானாகவே கட்சியிலிருந்து மட்டுமல்ல அரசியலிலிருந்தே ஒதுங்கத் தயார்" என சிறீதரன் சவால் விடுத்தார்.

இதனையடுத்து ஜனாதிபதி அநுரகுமாரவை நேரில் சந்தித்த அந்த அணியினர், ரணிலிடம் மதுபானசாலை அனுமதி பெற்றவர்களின் பட்டியலில் சிறீதரனின் பெயர் இருக்கின்றது. எனவே அந்த பட்டியலை வெளியிடுங்கள் என மன்றாடினர், அரசும் வெளியிட்டது அதில் சிறீதரனின் பெயர் இல்லை. அதனால் அந்த சதியும் தோற்றுப் போனது. இந்நிலையில் சிறீதரன் மீண்டும் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற நிலையில் அந்த சதியை முன்னெடுத்தவர்கள் அர்ச்சுனா எம்.பி.யின் "தங்கம்" எடுத்த வாக்குகளை விடவும் குறைவாக வாக்குகளைப் பெற்று படுதோல்வியடைந்தனர். இது சிறீதரனுக்கு ஏற்பட்ட இரண்டாவது கண்டம்.

இவ்வாறான நிலையில்தான் சிறீதரன் சட்டத்துக்கு முரணாக சொத்துக்கள் வைத்திருப்பதாக சிவில் ஆர்வலர் சஞ்சய் மஹாவத்த என்பவர் குற்றப் புலனாய்வுத்துறையில் தற்போது முறைப்பாடு செய்து சிறீதரனுக்கு எதிரான மூன்றாவது கண்டத்தை ஏற்படுத்தியுள்ளார். சிறீதரன் தமது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களின் பெயர்களில் சொத்துக்களைப் பராமரித்து வருவதாகவும் இது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மைகள் வெளிப்படுத்தப்படவேண்டும் என்றும் முறைப்பாட்டாளர் கோரியுள்ளார். இந்த முறைப்பாட்டாளர் ரணில் விக்கிரமசிங்கவின் தீவிர ஆதரவாளர். அவர் முன்னாள் சிங்கள அமைச்சர்கள், எம்.பி.க்களின் சொத்துக்கள் தொடர்பில் இவ்வாறு பல முறைப்பாடுகளை செய்துள்ளவர்.

ஆனால் "எனக்கு முகம்தெரியாத சிங்கள சமூகத்தை சேர்ந்த ஒருவர் நிதிக்குற்ற புலனாய்வு பிரிவில் சொத்து குவிப்பு சம்பந்தமாக என் மீது முறைப்பாடு செய்திருக்கிறார். இந்த விடயத்தை நல்லதொரு விடயமாகவே நான் பார்க்கிறேன். என்னுடைய பெயரிலேயோ அல்லது என்னுடைய குடும்பத்தினரின் பெயரிலேயோ இலங்கைக்குள்ளோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ சொத்துக்கள் இருந்தால் அது தொடர்பில் நிதிக்குற்றவியல் விசாரணை பிரிவினர் கண்டுபிடித்து அதனை மக்களுக்கு வெளிப்படுத்துவது அவர்களது தார்மீக கடமை என தெரிவித்திருக்கும் சிறீதரன், என் மீதான இந்த அவதூறான செயற்பாட்டுக்கு பின்னால் தமிழரசு கட்சியின் தலைமை பதவி தொடர்பில் எனக்கெதிராக நீதிமன்றத்தினூடாக
இடைக்கால தடை உத்தரவு பெற்றிருக்கும் தரப்பினரே இருப்பதாகவும், தமிழரசு கட்சியின் தலைவராக நான் தெரிவு செய்யப்பட்டபோது என்னோடு சேர்ந்திருந்து எனது கைகளை தூக்கி,
என்னோடு இணைந்து செயற்படுவதாக கூறியவர்களே, கட்சியில் இணைந்து 6 மாதங்களே ஆகாதவர்களை வைத்துக்கொண்டு - பின்னணியில் இருந்துகொண்டு எனக்கெதிராக வழக்கு தாக்கல் செய்து இடைக்கால தடையை பெற்றிருந்தார்கள். அந்த அடிப்படையில் இந்த சம்பவங்கள் அனைத்துக்கும் பின்னால் கட்சியின் தலைமைப்பதவி தொடர்பில் வழக்குத்தாக்கல் செய்தவர்கள் இருப்பது தெளிவாகத் தெரிகிறது.எனவே, நிதி குற்ற புலனாய்வு பிரிவை நம்பி என்மீது சொத்து குவிப்பு தொடர்பில் முறைப்பாடு செய்திருக்கும் சிங்கள சமூகத்தை சேர்ந்த சஞ்சே மகாவத்த என்ற நபருடைய முறைப்பாட்டை ஏற்று உரிய விசாரணைகளை முன்னெடுத்து மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்துவது அவசியம்.

என்னிடம் அவ்வாறான சொத்துக்கள் இருந்தால் அதனை உறுதிப்படுத்தவேண்டுமென்பதே என்னுடைய நிலைப்பாடு. வருடாந்தம் என்னுடைய சொத்து விபரங்களை பாராளுமன்ற சபாநாயகரிடம் கையளிப்பதோடு, ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நே'னல் என்ற பிரிவுக்கும் கையளித்து வருகிறேன். இணையத்தளங்களில் அனைவரும் பார்க்கக்கூடிய வகையில் என்னுடைய சொத்து விபரங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. என்னுடைய சொத்து விபரங்கள் என்பது வெளிப்படையானது. இலங்கையில் விரல்விட்டு எண்ணக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களில் நானும் ஒருவனாக என்னுடைய சொத்து விபரங்களை வெளிப்படையாக ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நே'னல் நிறுவனத்தின் இணையத்தளத்தினூடாக வெளியிட்டு வருகிறேன்.
அதனை எவரும் பார்க்கமுடியும். ஆகவே என் மீது சுமத்தப்பட்டிருக்கும் முறைப்பாட்டை ஏற்று விரைவாக விசாரணைகளை ஆரம்பித்து உண்மையை கண்டறிந்து மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். நிதிக்குற்ற புலனாய்வு பிரிவின் விசாரணை அறிக்கையை நான் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

தலைமைக்கு சிறீதரன் கட்டுப்படவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்து தோற்றவர்கள், சிறீதரன் மதுபானசாலை அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளார் என்ற போலி குற்றச்சாட்டை சுமத்தி தோற்றவர்கள் தற்போது சிங்களத்தரப்போடு - ரணில் தரப்போடு கைகோர்த்து சிறீதரன் சட்டவிரோதமாக சொத்து குவித்துள்ளார் என்ற குற்றச்சாட்டை முன் வைத்துள்ளனர். இக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் கட்சி நடவடிக்கையாக சிறீதரன் மீது கட்சி தலைமைக்கு கட்டுப்படாமை குற்றச்சாட்டுடன் சட்டவிரோத சொத்துக்குவிப்பு குற்றச்சாட்டையும் முன் வைத்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து அவரை கட்சியிலிருது நீக்குவதே இவர்களின் திட்டம்.

தமிழரசுக் கட்சியின் இந்த அணியினருக்கு சிறீதரன் மீது ஏன் இந்தக்கொலைவெறி என்றுபார்த்தால் கொலைவெறி சிறீதரன் மீது அல்ல அவரின் எம்.பி. பதவி மீதே என "உள்வீட்டு" தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. தமிழரசின்
தலைவர் பதவியிலும் பாராளுமன்ற எம்.பி.பதவியிலும் சிறீதரனிடம் தோற்றவர்களினால் அதனை ஜீரணிக்க முடியவில்லை. அத்துடன் பாராளுமன்றத்தேர்தலில் வெற்றி பெறுவோம் என்ற அதீத நம்பிக்கையில் "மக்களினால் தெரிவு செய்யப்பட்டால் மட்டுமே பாராளுமன்றம் செல்வேன். தேசியப்பட்டியல் மூலம் ஒருபோதும் பாராளுமன்றம் செல்லமாடடேன்" எனத் தெரியாத்தனமாக சூளுரைத்துவிட்ட நிலையில் பாராளுமன்றத் தேர்தலில் தோற்று இன்று தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்றம் செல்லமுடியாத நிலை.

அதனால்தான் சிறீதரனை ஏதோவொரு வழியில் கட்சியிலிருந்து வெளியேற்றினால் அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமாகும் .அதன் மூலம் பாராளுமன்றத்தேர்தலில் சிறீதரனுக்கு அடுத்ததாக வாக்குகள் பெற்றவர் என்ற அடிப்படையில் பாராளுமன்றம் செல்லமுடியும் என்ற திட்டத்தில் சிறீதரனின் எம்.பி. பதவி மீது இலக்கு வைத்தே இவ்வாறு தொடர்ந்தும் சிறீதரனை வீழ்த்தும் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர் என்கின்றது அந்த உள்வீட்டுத்தகவல்.

சிறீதரனின் எம்.பி.பதவிக்கு எவ்வேளையும் ஆபத்து ஏற்படலாம் என்பதனை தமிழரசுக்கட்சியின் பதில் பொது செயலாளரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் அளித்துள்ள விளக்கமொன்றின் மூலம் அறிந்துகொள்ள முடியும். அந்த விளக்கத்தில் சுமந்திரன் பின்வருமாறு கூறுகின்றார்.

"தமிழரசுக்கட்சியில் எடுக்கப்படுகின்ற ஒழுக்காற்று நடவடிக்கைகள் சமபந்தமாக பலர் பல கேள்விகளை எழுப்பியுள்ளனர். இதற்கு முன்னைய காலத்தில் இப்படியாக இருந்ததில்லை.எவருக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டதில்லை. இப்பொழுது திடுதிப்பென்று புதிய பொது செயலாளர் இடை நிறுத்துகின்றார் விளக்கம் கேட்டு கடிதம் அனுப்புகின்றார் என்றெல்லாம் பல விமர்சனங்கள் வந்துகொண்டே இருக்கின்றன.

நான் இந்த கட்சிக்கு 2010 ஆம் ஆண்டே வந்தேன். 2011 ஆம் ஆண்டு பியசேன என்பவரின் வழக்கு வந்தது. 2010 ஆம் ஆண்டு கட்சியின் தீர்மானத்திற்கு எதிராக பாராளுமன்றத்தில் 18 ஆம் திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்த காரணத்தினால் நாம் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து அவரை கட்சியிலிருந்து நீக்கினோம் .அந்த வழக்கை நான் தான் கையாண்டேன். அப்போது தான் நானும் பார்த்தேன், எமது கட்சி யாப்பில் ஒழுக்காற்று நடவடிக்கை என்று எந்தவிதமான ஏற்பாடுகளும் இருக்க வில்லை.

எனது சிரே'ட ஜனாதிபதி சட்டத்தரணி கனகஈஸ்வரனிடம் இதில் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு ஒன்றும் இல்லையே என்று கேட்டேன். இதற்கு அவர் சொன்னார் "தம்பி முன்னைய காலத்தில் ஒருவரும் நீதிமன்றம் போவதில்லை. கட்சி நீக்கினால் நீக்கினதுதான். கட்சி என்பது ஒரு பிரைவேட் கிளப். இது எமது அமைப்பு. அதில் உங்களுக்கு ஒத்துவராது விட்டால் நீங்கள் வெளியே போகலாம். கட்சியோடு இணங்க முடியாதுவிட்டால் போகச் சொன்னால் போக வேண்டியதுதான் என்று அவர் விளக்கம் கொடுத்தார்.

அதற்கு பின்னர் நான் தேடிப்பார்த்தபோது இந்தக்கட்சியின் ஆரம்பகாலத்தில் பலர் அப்படியாக விலக்கப்பட்டவர்கள் இருக்கின்றார்கள். விசேடமாக இருவரை சொல்லலாம். தமிழரசுக்கட்சியின் மூளை என்று வர்ணிக்கப்படுகின்ற தீவகத்தை சேர்ந்த வீ. நவரத்தினம். 1970 ஆம் ஆண்டில் கட்சிக்கு மாறாக செயற்பட்டார் என்ற காரணத்தினால் அவர் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார். அவர் கட்சியின் முடிவுக்கு மாறாக செயற்பட்டவுடனேயே எந்தவித விசாரணையும் இன்றி நீர் கட்சியிலிருந்து வெளியே போகலாம் என தந்தை செல்வா கூறி அவரை நீக்கி விட்டார்.

அடுத்தவர் சி.எக்ஸ். மார்ட்டின். இவர் யாழ் எம்.பி.யாக இருந்தவர், அவர் ஒரு இளைப்பாறிய நீதிபதி. அவர் 70ஆம் ஆண்டளவில் கட்சிக்கு முரணாக செயற்பட்டபோது, ஒரு கூட்டத்தில் அவர் எழுந்து பேச முற்பட்டபோது தந்தை செல்வா அவரின் தோளில் கைவைத்து நீர் அமரும் எனக்கூறி இருத்திவிட்டார். சிறிது நேரத்துக்கு பின்னர் மார்ட்டின் நீர் போகலாம் எனக்கூறி அவரை கட்சியை விட்டு அனுப்பி விட்டார்.

கட்சியின் ஒழுக்கக்கோவையுடன் இணைந்து செயற்பட முடியாதவர்கள் தாராளமாக வெளியே போகலாம். கட்சிக்குள் இருந்து கொண்டு கட்சிக்கு மாறாக செயற்படுவதனை எந்த மானமுள்ள அரசியல் கட்சியும் அனுமதிக்காது. கட்சிக்குள் இருந்து கொண்டு பலவிதமான கேள்விகளை எழுப்பலாம் கருத்துரைக்கலாம். கட்சி செய்வது தவறு என்று கூறலாம். இவை செவிமடுக்கப்படும். ஆனால் இறுதியில் ஒரு தீர்மானத்தை கட்சி எடுத்தால் அந்த தீர்மானத்திற்கு ஆதரவில்லாமல் பேசியவர்கூட கட்சியின் தீர்மானத்தோடு சேர்ந்து நிற்க வேண்டும்.
(தொடர்ச்சி 17ம் பக்கம்)

(15ம் பக்கத் தொடர்ச்சி)

# தாய் மண்ணில் வாழ்ந்தபடி நெருக்கடிகளுக்கு மத்தியில் தொடர்ந்து எழுத்தின் வழி தனது மேன்மையான பங்களிப்பை ஆற்றும் தீபச்செல்வனுக்கு நன்றியும் பாராட்டுகளும்

அதே சமயம் வரலாற்றுத் தகவல்களை இயல்பாகக் கதையில் பின்னி அமைத்திருக்கலாம் என்பது எனது கருத்து.

இந்த நாவல் இரட்டை காலக் கட்டமைப்பை (னரயட வைஅநடைநெ ளவசரஉவரசந) பயன்படுத்துகிறது, இக்கட்டமைப்பில் ஒரு அத்தியாயம் நிகழ்காலத்தில் இடம்பெறுகிறது, அதற்கடுத்த அத்தியாயம் இறந்தகாலத்தில் அமைகிறது. இந்த மாதிரியான அமைப்பு, சரியாக கட்டமைக்கப்படும்போது கதைக்குப் பெரும் ஆழத்தையும் பிணைப்பையும் வழங்கக்கூடியது.

இரகசியங்களை மெல்லவெல்ல வெளிப்படுத்தவும், கடந்த கால நிகழ்வுகள் நிகழ்காலத்தில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதைக் காண்பிக்கவும் பொதுவாக இரட்டை காலக் கட்டமைப்பு பயன்படுத்தப்படும்.

ஆனால் இந்நூலில் நிறைய கதாபாத்திரங்கள் அறிமுகப்படுத்தப்படுவதாலும் கதையின் கரு, முக்கிய கதாபாத்திரங்களில் இருந்து அடிக்கடி பல இடங்களுக்கும் பல சம்பவங்களுக்கும், பல விவரிப்புகளுக்கும் தாவுவதாலும் கதாபாத்திரங்கள் ஒருவருக்கொருவர் தொடர்புடையவர்களாக இருந்தாலும், அவர்களின் கதைகள் சிதறலாகவே, இடையிடையே வரும் அத்தியாயங்களில் மட்டும் வெளியாவதால், அவர்களை ஒப்புணர்த்திக் கொள்ளவும், எந்த காலக் கட்டத்தில் அந்தச் சம்பவங்கள் நடந்தன என்பதை உணரவும் வாசகர் சிரமப்பட வேண்டி இருந்தது. கதையோட்டத்தில் கவனத்தைச் செலுத்த முடியவில்லை.

இது முக்கியமான பாத்திரங்களுடனான உணர்வுபூர்வமான பிணைப்பைக் குறைத்து, படிக்கும் அனுபவத்தைக் கெடுப்பதாக இருந்தது.

அந்த வகையில் சிறப்பான உத்திகள், படிமங்கள், உடனே மனதில் பதியும் கதாபாத்திர அறிமுகங்கள், வரலாற்றுப் பின்னணியை இயல்பாகக் கதையோடு இணைத்தல், பிசகாத கதை ஓட்டம் - இவை அனைத்துக்கும் சிறந்த உதாரணமாக அமைந்து சிறப்பான வாசிப்பு அனுபவத்தைத் தந்த எழுத்தாளர் தேவகாந்தன் அவர்கள் எழுதிய கனவுச்சிறை நாவலைக் குறிப்பிடுவது பொருத்தம் என நினைக்கிறேன்.

அடுத்து, நூலில் இடம்பெற்றுள்ள சில உரையாடல்கள் யதார்த்தம் அற்றவையாக இருந்தன.

எடுத்துக்காட்டாக, உதயன் என்கிற ஒரு ஒத்தோடி சொல்வதாக " நான் அங்கு வந்ததே (அதாவது வன்னிக்கு வந்ததே) காட்டிக்கொடுக்கத்தான்" என்று சொல்லப்படுகிறது. இது யதார்த்தத்தில் நடைபெறாது. ஒரு ஒத்தோடி "நான் ஒரு ஒத்தோடி" என்று சொல்லமாட்டான். அவ்வாறானவற்றை வார்த்தைகளில் சொல்லவேண்டிய அவசியமோ தேவையோ இல்லை. இத்தகைய இடங்களில் படிமத்தோடு நிறுத்தியிருக்கலாம் என்பது என் கருத்து.

இறுதியாக எழுத்தாளர் கதையின் தொடக்கத்தில் சொல்லி இருக்கிற வரிகளுடனேயே முடிக்கலாம் என நினைக்கிறேன். இது நம் எல்லோருக்கும் பொதுவான உள்ளக்கிடக்கைதான். இந்த வரிகளிலேயே நம் அனைவரதும், போராட்டத்தினதும், போராளிகளதும், இந்த நூலினதும் ஆற்றாமையை, இயலாமையை வெளிப்படுத்தலாம்.

அந்த வரிகள், "காதில் விழுந்தாலும் உண்மை புரிந்தாலும் காலங்களை மறக்க முடியவில்லை. காலத்தை மறந்தால் உன்னையுமல்லவா மறக்கவேண்டியிருக்கும்?".

இயக்கத்தை, போராட்டத்தை, தமிழ் தேசியத்தை தலைமையை நேசித்த எல்லாருக்கும் இந்த வரிகள் மனதுக்கு நெருக்கமானதாகத்தான் இருக்கும். அந்த "உன்னை மறந்தால்" என்பது ஒரு போராளி நண்பனாக இருக்கலாம், போராளி சகோதர சகோதரியாக உறவாக அல்லது மாவீரராக இருக்கலாம். ஆனால் நம் அனைவரதும் தவிப்பு இந்த வரிகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்று சொல்லலாம்.

தீபச்செல்வன் அவர்களது எழுத்துக்கு வலிமை உண்டு, அழகு உண்டு, ஒரு இசை உண்டு, ஈர்ப்பு உண்டு. உயிர்ப்பு உண்டு. கவிமொழி உண்டு. அது ஒரு தனித்திறமை.

அதையே உரைநடைக்கு எடுத்துவரும்போது வேறுபட்ட அணுகுமுறைகள், கட்டமைப்புகள் தேவை. இது சவால்தான். ஆனால் அவரது கவிதைகளில் இருக்கும் இலக்கிய அழகை உரைநடை எழுத்திலும் கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இருக்க எமது போராட்ட வாழ்வினைப் பிரதிபலிக்கும் அறம்சார்ந்த இலக்கியப் படைப்புகள் நம் மக்கள் கடந்து வந்த அனுபவங்களைப் பற்றிய ஆழமான புரிதலை இளைய தலைமுறையினரிடம் வளர்க்க உதவும் கருவியாகவும் போராட்ட வாழ்வியலின் தாக்கத்தை அனுபவித்தவர்களின் நினைவுகளையும், நிகழ்வுகளையும், அனுபவங்களையும் பாதுகாக்கும் பெட்டகமாகவும் விளங்குகிறது.

அந்த வகையில் தாய் மண்ணில் இருந்தபடியே பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் தொடர்ந்து எழுத்தின் வழி தனது மேன்மையான பங்களிப்பை ஆற்றி வரும் தீபச்செல்வனுக்கு என் நன்றியும் பாராட்டுகளும்.

## வீணாவின் கவிக்கணை

சுவரில்லா வீடு,
வெறிச்சோடிய பாதை,
தன்னந்தனியாய்
நிற்பது போல் ஓர்
உணர்வு தோணுகையில்,
கண்மூடி ஒரு நிமிடம்
நீ கடந்து வந்த கரடு முரடான
பாதையையும், அதிலிருந்து
வெளிவர நீ கையாண்ட
யுக்தியையும் நினைத்துப்பார்,
உன் மனதில் தெளிவு பிறந்து
நற்பாதை தெரிந்திடும்!

(16ம் பக்கத் தொடர்ச்சி)

## சிறீதரன் எம்.பி.க்கு பூரண ஆயுள்...நித்தம் கண்டம்

வெளியே போய் நின்று கொண்டு நான் இதனை எதிர்த்தேன். எனக்கும் இதற்கும் தொடர்பில்லை என சொல்வது முறையற்ற செயற்பாடு.கட்சி கட்டுப்பாட்டோடு இயங்காது விட்டால் அது ஒரு கட்சி அல்ல. கட்சி ஒரு கொள்கையை அறிவித்தால் இல்லை அதனை நான் ஏற்கமாடடேன் என்றால் அவர் வேறு கட்சிக்குபோகவேண்டும். இந்தக்கட்சியில் இருக்க முடியாது. இந்த விடயத்தில் எமது மத்திய குழுவும் செயற்குழுவும் தீர்க்கமான நடவடிக்கைளை எடுத்துள்ளது. நானாக தன்னிச்சையாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எமது கட்சி யாப்பின் பிரகாரம் பொது செயலாளர் தீர்மானங்களை நிறைவேற்றுகின்ற நிறைவேற்று உத்தியோகத்தர். கட்சி தீர்மானத்தை நிறைவேற்றுகின்றவர் நான் என்பதனால் என்னுடைய கையொப்பத்துடன் கடிதங்கள் போகின்றனவே தவிர அது எனது தன்னிச்சையான முடிவு அல்ல.

கட்சியின் தீர்மானத்திற்கு மாறாக செயற்படுகின்றவர்களை கட்சி நீக்குகின்றபோது கடந்த 30 வருடங்களாக உச்ச நீதிமன்ற தீர்ப்புகள் எல்லாம் கட்சிகளுக்கு மாறாகவே வந்துள்ளன. அந்த எம்.பி.க்கு அந்த அதிகாரம் இருக்கின்றது என்ற வகையிலேயே தீர்ப்புக்கள் வந்தன. ஆனால் கடந்த 2 வருடங்களில் அந்த நிலை மாறியுள்ளது. கட்சி எடுக்கும் தீர்மானத்திற்கு மாறாக செயற்பட்டவரை கட்சி நீக்க முடியும்

அதனால் அவரின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி நீங்கும் என்று அண்மைய காலத்தில் 3 தீர்ப்புக்கள் வந்துள்ளன. அந்த 3 தீர்ப்புகளும் வருவதற்கு நானும் காரணமாக இருந்துள்ளேன் என்பதை பெருமையாக சொல்லலாம். அந்த வழக்குகளை வாதாடியவன் நான்.

ஒன்று நசீர் அஹமட்.மு.கா. அவரை அக்கட்சியிலிருந்து நீக்கியபோது அதை அவர் சவாலுக்குட்படுத்தினார். நான் வாதாடினேன்.30 வருடகால தீர்ப்புகள் மாற்றப்பட்டு ஒரு விசாரணை கூட இல்லாது நீக்கப்பட்டது சரி என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. எம்.பி. பதவியும் இல்லாமல் போனது. அடுத்து ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ஹரின் பெர்னாண்டோ, மனு' நாணயக்கார நீக்கப்பட்டனர். கட்சியின் முடிவுக்கு மாறாக செயற்பட்டு அரசுக்கு சென்று அமைச்சு பதவிகளை எடுத்த காரணத்தினால் கட்சி அவர்களை நீக்கியது சரி என தீர்ப்பு வந்தது.எம்.பி. பதவியும் இல்லாமல் போனது.

கட்சியின் தீர்மானம். கொள்கைக்கு மாறாக செயற்படுபவர்களுக்கு எதிராக கட்சி கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும். அவர்கள் தவறு செய்தது உறுதிப்படுத்தப்பட்டால் உடனடியாக கட்சியிலிருந்து நீக்கப்படுவார்கள். அவர்களுக்கு சட்ட ரீதியாகக்கூட நிவாரணம் எதுவும் கிடைக்காது என்பது இப்போது உறுதியாகியுள்ளது. எமது கட்சியில் கூட அண்மையில் சிலர் கட்சிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தனர். முன்னாள் எம்.பி. சிவமோகன்.


அவர் இப்போது வழக்கை வாபஸ் பெற்றுள்ளார். அவர் கட்சிக்கு எதிராக செயற்பட்டார் என்ற காரணத்தை வைத்து அவரை கட்சியின் உறுப்புரிமையிலிருந்து இடை நிறுத்தினோம். விளக்கம் கோரி கடிதம் அனுப்பிய போது அவர் கட்சிக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்தார்.அவருக்கு நீதிமன்றம் நிவாரணம் கொடுக்க இருதடவைகளும் மறுத்து விட்டது.

எனவே கட்சி ஒழுக்கக் கட்டுப்பாடு காரணமாக நடவடிக்கை எடுக்கும்போது எந்த நீதிமன்றமும் அதில் தலையிடாது. ஆகவே எதையும் செய்து விட்டு கட்சி ஒரு தீர்மானத்தை எடுத்தால் அதுக்கு நான் இணங்க மாட் டேன். இது என்னுடைய சுதந்திரம்,நான் இன்னொரு வேட்பாளரை ஆதரிப்பேன் என்று சொல்லி நடப்பவர் கள் விரைவில் கட்சியிலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.

இதன் மூலம் தமிழரசுக்கட்சியில் சிறீதரனின் இருப்புக்கும் அவரது எம்.பி.பதவிக்கும் எந்தளவு ஆபத்து காத்திருக்கின்றது என்பதனை புரிந்து கொள்ள முடியும். ஒருவேளை சிறீதரன் சர்வாதிகாரத்தால் கட்சியிலிருந்து நீக்கப்பட்டால் அவர் நீதிமன்றம் மூலம் கூட நீதியைப் பெறமுடியாது என்ற நிலையேயுள்ளது. சிறீதரனைப் பொறுத்தவரையில் "பூரண ஆயுள்...நித்தம் கண்டம்" என்ற நிலையில் அவரின் தலைக்குமேலே கத்தி தொங்கிக் கொண்டிருக்கின்றது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# நினைவழிப்பு யுத்தம்: தமிழ்த் தேசியத்தை அழிக்கச் சூழும் இந்திய – இலங்கை புலனாய்வுப் போர்




## ஒரு இனத்தின் நினைவுகள் அழிக்கப்படும்போது

"ஒரு இனம் சார்ந்த மக்களை அழிக்க விரும்புகிறீர்களா? முதலில் அவர்களின் நினைவுகளை அழியுங்கள்." - இது வெறும் கூற்று அல்ல் பல்லாயிரம் ஆண்டுகளாக உலகின் பேரரசுகள் பின்பற்றி வரும் உளவுத் தத்துவம். ஒரு இனத்தின் அடையாளமாக இருப்பது அதன் மொழி, பண்பாடு, போராட்ட வரலாறு, மற்றும் வரிசைப் தலைமைகள். இவை அனைத்தும் கூடியே உருவாகின்றது - பொதுநினைவு.

இன்றைய உலகத்தில், பீரங்கிகள், துப்பாக்கிகள் மட்டுமல்லாமல், நினைவுகளை அழிக்கும் உளவுத்துறைகள் எனும் புதிய போர் ஆயுதங்கள் உருவாகியுள்ளன. அந்த யுத்தத்தின் சாயல் தமிழ்த் தேசியத்தையே அழிக்கக் கூடியதாக மாறியிருக்கிறது. இலங்கையும் இந்தியாவும் இணைந்து மேற்கொள்ளும் உளவியல் சார்ந்த போர் (psychological warfare) - அதில் மையமானதொரு செயற்கூறு: நினைவழிப்பு.

## நினைவழிப்பு - தமிழ்த் தேசியத்தை அழிக்கும் திட்டமிடப்பட்ட உளவுக் கொள்கை

நினைவழிப்பு (Memory Erasure) என்பது தற்செயலாக நடைபெறும் நிகழ்வல்ல. இது ஒரு முழுமையான திட்டமிடல் மற்றும் உளவியல் பசை கொண்டு செயல்படும் யுத்த உத்தி. இந்தியாவின் புலனாய்வு அமைப்பான RAW (Research and Analysis Wing), இலங்கை அரசின் SIS (State Intelligence Service), இராணுவ உளவுத்துறை, DMI, TID ஆகியவை தமிழர் தேசிய இயக்கத்தை முழுமையாக அழிக்க நினைவழிப்பை முக்கிய அடித்தளமாக எடுத்துக் கொண்டுள்ளன.

## இந்த நினைவழிப்பு உளவுக் கொள்கையின் மூல நோக்கங்கள்:

தமிழர் விடுதலை இயக்கத்தின் வரலாற்றைக் குழப்புதல்

தியாகங்களை மறைத்தல் மற்றும் அசல் தலைமையை மீள இடமாற்றம் செய்தல்

புதிய தலைமுறையிடம் உண்மையான விடுதலைக்கருத்துகளை விலக்கி தவறான பிம்பங்களை விதைத்தல்

தமிழ் மக்கள் எண்ணங்களில் தேசிய உணர்வைக் கலைத்தல்

இந்த நோக்கங்கள் சிறு சிறு மனோபோர உத்திகளாக வகுத்து செயல்படுத்தப்படுகின்றன. உணர்ச்சி அரசியல், பொய்யான ஒளிபரப்புகள், இணைய உளவாளிகள், யூட்யூப் திடற்பொருள்கள், சமூக ஊடக வழிப்புணர்வுகள் போன்றவற்றைத் துணையாகக் கொண்டு செயல்படுகின்றன.

## நினைவழிப்பின் உளவுச் செயல்பாடுகள்: ஆழமான பார்வை

(அ). சொல்லாடல் மோசடிகள் (Semantic Manipulation)

தலைவர் மேதகு வே. பிரபாகரன், மாவீரர்கள், தமிழீழக் கொடி, மாவீரர் நாள், விடுதலைப் போரின் புகைப்படங்கள் போன்றவற்றை உண்மையாக ஆதரிப்பது போல காட்டும் ஒரு மர்ம உளவுத்துறை இயக்கம் இயங்குகிறது. இவை உண்மையில் உணர்வுகளை தூண்டி, ஒரு பொய்யான அரசியல் பிம்பத்தை தோற்றுவிக்கின்றன. மக்கள் மத்தியில் உண்மை எதிர்பார்ப்பை குழப்பும் நோக்கத்தில் "தாய் மக்களுக்காக வீரவணங்குகிறோம்" எனும் வாசகங்களைச் சூழலமைப்புடன் பயன் படுத்துகின்றன.

(ஆ). சந்தர்ப்பவாத ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள்

பொதுவாகக் கவனிக்கப்படாத ஒருவகை முகமூடியாளர். ஒருபுறம் மாவீரரை புகழ்ந்து பேசுகிறார்கள், மறுபுறம் இந்தியா மற்றும் இலங்கை அரசுடன் கூட்டு வேலைப்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். இவர்களின் செயல்களில் உண்மை தவிர "தங்கள் சொந்த வளர்ச்சி" என்ற சுயநலத்திற்கான தேசியத்தோற்றத்தைக் காணலாம். ஊடகங்களில் புலனாய்வுத் தூண்டல்களின் கீழ் இயக்கப்படுபவர்கள், தனிநபர் பார்வைகளாகவும், கட்டுக்கதைகளாகவும் உண்மையை அழிக்கின்றனர்.

(இ). மாற்று இயக்கங்களில் பதுக்கப்படும் உளவாளிகள்

"மரபுவழி கலாசார இயக்கங்கள்", "மொழிபண்பாட்டு ஆராய்ச்சிக்கழகங்கள்", "நவமார்க்க அறப்போர் அமைப்புகள்" எனக் காணப்படும் சில அமைப்புகள் - உண்மையில் இந்தியா அல்லது இலங்கை புலனாய்வுப் பிணைப்பில் செயல்படுகின்றன. இவை:

உண்மையான போராளிகளின் புகழை புறக்கணிக்க,
தலைமையை மாற்றும் பிம்பங்களை உருவாக்க,
இளைய தலைமுறையின் நாட்டுப்பற்று உணர்வை ஒதுக்க,
தற்காலிக "மாற்று கதாநாயகர்களை" உருவாக்க

எனும் நோக்கத்துடன் செயல்படுகின்றன. இவை சமூக ஊடகங்களில் அதிகமுள்ளன.



## தலைவர் மேதகு வே. பிரபாகரன் - நினைவின் அடையாளமாக

மேதகு வே. பிரபாகரன் தமிழர் தேசிய விடுதலைக் குறியீடாக, ஒரு அறப்போர் சின்னமாக திகழ்கிறார். ஆனால் புலனாய்வுத் திட்டங்கள் இன்று அவரது நினைவுகளையும் இருதரப் பிம்பங்களாக மாற்ற முனைகின்றன. சிலர்:

"தலைவர் உயிருடன் இருக்கிறார்", "தலைவர் மறைந்துவிட்டார்" என இருபக்க எண்ணச்சுழற்சி ஏற்படுத்துகிறார்கள்.
உணர்ச்சிகள் தூண்டும் வகையில் பழைய வீடியோக்களை திரித்து வெளியிடுகிறார்கள்.
தலைவரின் பெயரால் உண்மை தலைமை உரிமையை கைப்பற்ற முனைகின்றனர்.

இவை எல்லாம் தலைமையை வெறுமை படுத்தி புதிய தலைமுறை பிம்பத்தை உருவாக்கும் "leader replacement" உளவுத் திட்டங்களின் ஒரு பகுதியாகவே பார்க்கப்படும். ஒரு உண்மைத் தலைவர் நினைவாக மாறும்போது, அந்த நினைவும் ஒருவகை போர்க்கலமாக மாறுகிறது. அந்த நினைவைக் கையாள முயல்வதே ஒரு உளவுப் போர்.

## இலங்கை - இந்திய புலனாய்வுப் பணிகளில் ஏற்பட்ட ஒத்துழைப்பு - வரலாற்றுச் சான்றுகள்

1980களிலிருந்து இந்தியாவின் சுயுறு மற்றும் இலங்கையின் SIS இடையே தமிழ் தேசிய இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நெருங்கிய ஒத்துழைப்பு இருந்து வந்துள்ளது. இது பல வரலாற்றுச் சான்றுகளால் நிரூபிக்கப்பட்டது:

1987ல் இந்திய இராணுவத்தின் IPKF நடவடிக்கைகள், தமிழீழ விடுதலைப் புலிகள் மீது RAW வழங்கிய உளவுகளின் அடிப்படையில் நடைபெற்றது.

2006-2009 காலகட்டத்தில், இலங்கை இராணுவம் இயக்கிய இறுதிக் கால சட்திட்டங்களுக்கு RAW வழங்கிய தொழில்நுட்ப மற்றும் தரவுத்தகவல் ஆதரவுகள் இருந்தன.

போர் முடிந்தபின், "Counter-Tamil Radicalism" என்ற ஒத்துப் போர் வேலைப்பாடுகள் 2010இல் தொடங்கப்பட்டன.

2020க்குப் பின்னரும், புலனாய்வு கட்டுப்பாட்டில் இயங்கும் பல தமிழ் தோற்ற அமைப்புகள் இணையத்தில் இயங்குவது தெரியவந்திருக்கின்றன.

இந்த ஒத்துழைப்பு, தமிழர் விடுதலைச் செயல்முறைகளை வலுவிழக்கச் செய்த முக்கியமான காரணிகளில் ஒன்று.

## தமிழர் நினைவுகள் - மனோதத்துவப் பின்விளைவுகள்

நினைவுகள் என்பது வெறும் ஒற்றை நினைவகத் துணுக்கல்ல. Collective Memory எனப்படும் சமூக நினைவுகள், ஒரு இனத்தின் அடையாளத்தின் உயிராக விளங்குகின்றன. தமிழர் மக்களின் விடுதலை நினைவுகள்:

விடுதலைப்போரின் புகைப்படங்கள்
மாவீரரின் பெயர்கள்
மாவீரர் நாள் நிகழ்வுகள்
தலைவர் வீடியோ உரைகள்
சண்டை தருணங்கள்

இவை அனைத்தும் Emotional Anchors ஆக உள்ளன. இந்த மனக் கண்ணிகளை முறியடிக்கவே நினைவழிப்பு நடத்தப்படுகிறது. Mnemonic Warfare எனப்படும் இந்த மனோபோர், உணர்வுகளை சிதைக்க, பொதுநினைவுகளை திருப்பி அமைக்க, வரலாற்றை புதிதாக உருவாக்கும் முயற்சி.

உண்மை சொல்லப்படாமல் இருக்கும்போது, பொய் கதைகள் எளிதில் மாறிக்கொள்வதற்கான வாய்ப்பு அதிகம். இதனை மனோபோர் சீரியஸ் நோக்கமாக பயன்படுத்துகிறது.

## நினைவழிப்புக்கு எதிராக - உண்மைச் சாட்சிகள்

நாம் உண்மை எழுதும் வரை நினைவழிப்பு தோற்கும். இதற்காக:

மாவீரரின் பெயர்கள், புகைப்படங்கள், புள்ளிவிவரங்கள், சரிதைகள்
போரின் இயக்கங்கள், செயல்பாட்டுச் சித்திரங்கள், தளவமைப்புகள்
சிறைச்சாலை மரணங்கள், படுகொலைச் சம்பவங்கள்
ஆவணப்படுத்தப்பட்ட காணொளிகள், ஒலிப்பதிவுகள்

இவை அனைத்தும் பதிவாக வேண்டும். உண்மையை எழுதுவது தமிழரின் மீளெழுச்சிக்கான முதன்மை ஆயுதமாகும்.

## நினைவுகளை காக்கும் தமிழனாக வாழ்வது

தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தின் நெஞ்சிலும், குருதியிலும், வரலாறிலும் பசியும் தாகமும் போல பதிந்திருப்பது - நினைவுகள். இவை அழிக்கப்படும்போது, ஒரு இனத்தின் உயிரே ஒதுக்கப்படுகின்றது. ஆனால் உண்மையைப் பதிவு செய்யும் ஒவ்வொரு தமிழனும், நினைவழிப்பு அரசியலுக்கே எதிரான ஒரு கோட்டையாக உருவாகிறான்.

**"நினைவு இல்லாத மக்கள் ஆன்மா இல்லாத மக்கள்."**
**- பாட்ரிஸ் லுமும்பா**

நாம் இன்று எழுதும் ஒவ்வொரு வரியும், எதிர்கால தமிழ் தலைமுறைகளுக்கான மனச்சான்றாக நிலைக்கும். அந்த உண்மை சொற்கள், மறக்க முடியாத மறுப்பு உச்சரிப்புகளாக பரவிவிடும்.


***எழுதியவர் - ஈழத்து நிலவன்***
***(தமிழ்த் தேசிய நினைவுகளுக்காக எழும் எதிர்வினை)***

# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும் 1157



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## சீதாஎலிய, சீதையம்மன் ஆலயம் நுவரெலியா

*" அன்னை தந்தை இல்லா யார்க்கும் அன்னை ராமஜெயம்*
*கண்ணை இமைபோல் காவல் செய்யும் வேதம் ராமஜெயம்*
*அல்லும்பகலும் துன்பம் வந்தால் தீர்க்கும் ராமஜெயம்*
*அங்கும் இங்கும் துள்ளும் மனதை வெல்லும் ராமஜெயம். "*

லௌகீக வாழ்க்கயின் அத்தனை வாழ்க்கைத் தத்துவங்களையும், எடுத்தியம்புபவையாக இதிகாசங்கள் விளங்கியுள்ளன. பெருங்கதைகளும், அவற்றுள் உபகதைகளுமாக இதிகாசங்களின் பாத்திரப் படைப்புகள் மேலோங்கிக் காணப்படுகின்றன. இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றிலே படைக்கப்பட்ட சீதையும், திரௌபதையும் காலத்தை வென்ற பெண்பாத்திரங்களாகப் படைக்கபட்டனர். அவ்வாறே சிலப்பதிகாரத்திலே படைக்கப்பட்ட பெண்பாத்திரமான கண்ணகியும், மக்கள் மனதிலே நீங்கா இடம்பெற்றார். கற்பின் தெய்வங்களாக விளங்கிய சீதை, திரௌபதை, கண்ணகி ஆகியோருக்கு கோயில் எழுப்பி, தெய்வங்களாகப் போற்றுகின்றனர். இவர்கள் வாழுங்காலத்தில் எல்லையற்ற இல்னல்களை அனுபவித்து வெற்றிகொண்டவர்களாகக் காணப்பட்டனர்.

இராமஇராவணயுத்தத்தின் பின்னர், சீதையின் வாழ்விலே மீண்டும் புயல்விசியது. ராமனைக்காணும் ஆவலோடு சென்ற சீதையை, பிரிவின் துயரில் இருந்த இராமன் அதனை வெளிக்காட்டவில்லை. மாறாக, "சுக்கிரீவனோடும், விபீ'ணனோடும் நான் உறவு கொண்டது ராவண சம்காரத்தின் பொருட்டேயாகும். காமவெறிபிடித்தவனைக் கொல்வது என் கடமையாக இருந்தது. அத்தகைய தண்டனை தர்மத்தின்பொருட்டு இராவணனுக்குக் கொடுக்கப்பட்டது. சீ-தயே, அதே தர்மத்தின்பொருட்டு உன்மீதும் நடவடிக்கை எடுக்கப்போகிறேன். இராவணன் உன்னைத் தூக்கிச் சென்றான். பலமாதங்களாக அவன் தனது இராச்சியத்தில் உன்னை அடைத்து வைத்திருந்தான். உன்னுடைய புனிதத்தன்மையை உலகறிய நிரூபித்தபின்பே உன்னைச் சேர்வேன்" என்றுரைத்தான்.

இராமனின் கடுஞ்சொற்கள் சீதையை, வீரம் ததும்பும் விவேக மூர்த்தியாக உருவெடுக்கச் செய்தது. நான் தூய சீதாபிராட்டி. இந்தச் சடலத்தை நான் தீக்கு இரையாக்குவேன். என்னுடைய நிஜ சொரூபமாகிய ஆத்மாவை பரமாத்மாவிடம் சேர்ப்பேன். லக்'மணா எரிகின்ற அக்கினியை எனக்காக ஆயத்தப்படுத்து என்று வேண்டினாள். பின்னர், அமைதி-யோடு இராமனை வலம்வந்த சீதாப்பிராட்டி, இராமனை உபாசித்தவண்ணம் பெருநெருப்பாக எரிந்துகொண்டிருந்த நெருப்பினுள், நிறைபி-றழாத மாதரசியாக நடந்து சென்று மறைந்தாள்.

அப்பொழுது அக்னிபகவான் "சீதா-தேவி தூய்மைக்கு உறைவிடம். அந்தத் தூய்மையைத் தகிக்க நான் வல்லவன் அல்லேன்" என அசரீரி ஒலித்தது. மேனி அமைப்பிலும், புதுப்பிக்கப்படவளாக, பிரகாசமும் அமைதியும் வாய்க்கப்பெற்றவளாக, தீக்குண்டத்தினின்று சீதாதேவி வெளிப்பட்டாள். உயிர்கள் அனைத்திற்கும் அவள் இரக்கம் காட்டுபவள். அவளை மோகித்தவனுக்கும், சோதித்தவனுக்குத் இரக்கம் காட்டும் கருணாகரத் தெய்வமாக சீதை போற்றப்படுகின்றாள். இலக்குமிதேவியின் அவதாரமான சீதைக்கு, பாரதநாட்டிலும், ஈழத்திலும் கோயில் எடுத்து வணங்கி வருகின்றனர்.

சீதாஎலிய சீதையம்மன் ஆலயம் காலத்தால் முந்தியதெனக் கருதப்படுகின்றது. இராவணேஸ்வரனின் ஆட்சிக்குப் பின் இங்கு இவ்வாலயம் எழுப்பப்பட்டிருக்கலாம் என்பது ஆய்வாளர் கருத்தாகும். இவ்வாலயம் 1998 ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. தென்னிந்திய கட்டிடக் கலைஞர்களால் ஆகமமுறைப்படி, வடநாட்டுக்கோயில் அமைப்புடன் கட்டப்பட்டு கும்பாபி'கப்பெருவிழா நிறைவேற்றப்பட்டது. இவ்வாலயம், இயற்கையாகப் பாய்ந்துவரும் இயற்கையாற்றுத் தீருத்தத்தோடு, காலத்தால் அழியாத தொன்மையான மரவகைகளும், செடிகொடி-களும் சூழப்பட்ட இயற்கை எழில் கொண்ட சூழலிலே அமைந்துள்ளது.

சரித்திரப் பிரசித்திபெற்ற இவ்வாலயத்திலே சீதையம்மன், இராமர், இலக்குமணன், ஆகியோர் கற்சிலையாகக் காட்சி கொடுத்தனர். பின்னாளில் இச்சிலைகள் வடநாட்டுப்பாணியில் பளிங்குப்படிவமாகக் காட்சியளிக்கின்றன. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சீதையம்மன் ஆலயத்திலே, ஆஞ்சநேயருக்கான தனிக்கோயில் காணப்படுகின்றது.

சீதையம்மன் ஆலய கோபுரத்தில் திருமாலின் அவதாரங்கள் வைணவகோயிலின் அமைப்பையொத்து, அவயசுத்தியுடன் விக்கிரகங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. அத்தோடு இங்குள்ள தூண்கள்தோறும் இராமாயணக்காட்சிகள் அழகிய சிற்பங்களாகச் காட்சியளிக்கின்றன. சுவரின் மேற்பகுதியிலே இராமாயணக்காட்சிகள் பல ஓவியங்களாக மனதைக்கவரும்வகையில் தீட்டப்பட்டுள்ளன. குறிப்பாக, இராவணன் சீதையைத் தூக்கி வருதல், சடாயு இறகுவெட்டப்பட்ட நிலையில் காணப்படுதல், இலங்கையில் அசோகவனத்தில் அரக்கியர் மத்தியில் சீதை இருந்தமை, போன்ற ஓவியங்கள் இராமாயண காலத்தையும், அக்காலத்தில் நடைபெற்ற சம்பவங்களையும் நினைவூட்டுபவையாக அமைந்துள்ளன. சக்திவழிபாட்டின் அம்சமாகப் போற்றப்படும் சீதையம்மன் வழிபாடு, ஈழவரலாற்றோடு பின்னிப்பிணைந்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

*" பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும்*
*திண்மையுண் டாகப் பெறின் "*

தொடரும்...



# இவ்வார ராசிபலன்

## 01-08-2025 வெள்ளி தொடக்கம் 07-08-2025 வியாழன் வரையும்




**மேஷம்:** ஏற்றமும், மாற்றமும் நிறைந்த வாரம். வீடு, மனை யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. வீண் செலவுகள் தவிர்க்கவும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். வங்கி சேமிப்பு உயரும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. ஆரோக்கியம் சீராகும். அபார சம்பத்துக்கள் சேரும். இல்லத்தில் மகிழ்ச்சியும், அமைதியும் அதிகரிக்கும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். அரசியல்வாதிகள் ஏற்றம் பெறுவார்கள். புதிய வாகனங்களால் முதலீடு உண்டாகும். ஒரு சிலருக்குக் கௌரவ பதவிகள் தேடி வரும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். திருமண பாக்கியம் கைகூடும். சுமூகமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை பலப்படும். பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகள் வசூலாகும். பொருளாதாரம் உயரும். தொட்டது துலங்கும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்களில் ஒன்றிரண்டு நடந்தேறும். வெற்றிப் பாதையை அடி எடுத்து வைப்பீர்கள். தீர்த்த யாத்திரை உண்டு. வழக்குகள் சாதகமாகும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. புதிய எண்ணங்கள் நிறைவேறும். நிதி பற்றாக்குறை நீங்கும். இடமாற்றம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வியாபாரம் சிறக்கும். பணப்பிரச்சனை தீரும். தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். தெய்வீக ஈடுபாடு குறையும். சுயநலம் கூடும். உருண்டு பிரண்டாலும் கிடைக்காத செல்வம் இன்று கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பெருமாள், அதிர்ஷ்ட எண்: 8,5,4,3

அதிர்ஷ்ட நிறம்: பால் வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,X




**ரிஷபம்:** நவகிரஹ அனுகிரஹம் கிடைக்கும் வாரம். அரும்பிய ஆசையும் விரும்பிய காதலும் நிறைவேறும். பூமியால் லாபம் அடைவீர்கள். பிள்ளைகளால் இருந்து வந்து துன்பம் விலகும். பதவி வாய்ப்பு தேடி வரும். பங்குத்தொழில் பெரிய முன்னேற்றத்தைத் தரும். கட்டிடத் தொழில் முன்னேற்றம் தரும். வருமானத்திற்கேற்ற செலவு ஏற்படும். பழைய பாக்கிகள் வசூலாகும். குதூகலமான நிலை காணப்படும். புத்திரர்களால் மேன்மையுண்டு. அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். மருத்துவச் செலவுகள் ஏற்பட்டு மறையும். பொருளாதாரத்தில் உயர்வு ஏற்படும். ஆக்கப்பூர்வமான எண்ணம் மனதில் உதயமாகும். பணியாட்களின் ஆதரவு அதிக அளவு பெருகும். பாக்கியங்கள் அதிகரிக்கும். கோபத்தையும், வேகத்தையும் தவிர்த்து லாபத்தை சேர்க்கும். புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். நீண்ட நாட்களாக இருந்த பிரச்சனைகள் முடிவுக்கு வரும். பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு உருவாகும். நீண்ட நாட்களாக இருந்த பிரச்சனைகள் முடிவுக்கு வரும். அடுத்த வீட்டார்களின் ஆதரவு கிட்டும். பெருமிதத்தோடு காணப்படுவீர்கள். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். ஆடை, அணிகலன் சேர்க்கை உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். பணவரவு திருப்தி தரும். வணிகத் தொழில் லாபம் தரும். திருஷ்டிகள் விலகும். மற்றவர்களால் மேன்மை உண்டு.

அதிர்ஷ்ட எண்: 3,5,9,1

அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,R




**மிதுனம்:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். பட்டம் தேடி வரும். நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் ஒழியும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர் வருகையால் உற்சாகம் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்விச்செலவுகள் அதிகரிக்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். எதிர்பார்த்த வி'யம் ஒன்று தாமதமாகக் கூடிய காலம். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்ப்புக்கள் குறையும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். உடல்பொலிவு கூடும். பாதகமான சூழ்நிலைகள் அகலும். நல்லோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். முன்னேற்றங்கள் அதிகரிக்கும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணம் உதயமாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். ஸ்டேஷ்னரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். வம்ச விருத்தியாகக் கூடிய காலம். கலகலப்பான வாரமாக அமையும். பெண்களுக்கு யோகம் கூடி வரும். உறவினர் உதவி செய்ய முன் வருவர். பெரியோர்களை அனுசரித்து செல்வது நல்லது. விரயங்கள் அதிகமாகும். வீண் வம்பு உருவாகும். விளையாட்டுத்துறை லாபம் தரும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மனச்சஞ்சலம் ஏற்படும். அரசமரப் பிரார்த்தனையால் ஆயுள் விருத்தி கிடைக்கும். பணமும், தனமும் பக்குவமாக கிடைக்கும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். உயர்கல்வி ஆர்வம் ஏற்படும். தெரியாத நபர்கள் மூலம் உங்களுக்கு ஆதாயம் வரும். மங்களச் செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாலம்மன், அதிர்ஷ்ட எண்: 5,4,3,1

அதிர்ஷ்ட நிறம்: சந்தன நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: DS




**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் வாரம். பிள்ளைகளால் பெருமை சேரும். கடன் தொல்லை தீரும். கற்பனை வளம் கூடும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். மகான்களின் சந்திப்புக் கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். சுறுசுறுப்பு அதிகமாகும். மாலை நேரத்தில் இனிப்பான செய்தி வரும். வாசனை திரவியத்தில் ஆர்வம் கொண்டவர் நீங்கள். தெரியாத நபர்கள் மூலம் உங்களுக்கு ஆதாயம் வரும். மங்களச் செய்தி வரும். பெருமையான நிகழ்வுகளை அருமையாகச் சந்திப்பீர்கள். மன சந்தோஷம் கூடும். உடல்நலம் கவனம் தேவை. வாழ்த்துக்கள் வந்து சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். வெளிநாட்டுப் பயணம் திருப்தி தரும். பேச்சில் துணிவு ஏற்படும். நிதி நிலைமை சீராகும். அரசுப்பணியில் மாற்றம் வரும். தீயஎண்ணங்கள் விலகும். கலைத்தொழில் உயர்வு உண்டு. விவசாயம் விளைச்சல் தரும். அனுகூலமானப் போக்கு நிலவும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். பிரார்த்தனையால் பலன் உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். பணவரவு அதிகரிக்கும். சகோதரியால் நன்மை உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் அதிக மதிப்பெண்கள் எடுப்பார்கள். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். சுபகாரியம் கூடி வரும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். கொடுக்கல், வாங்கலில் சுமூகமான தீர்வு வரும். உடல் உபாதை நீங்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். ஆன்றோர்கள் வாழ்த்துக் கிட்டும். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 8,9,2,6

அதிர்ஷ்ட நிறம்: வெளிர் நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,W



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

**"ஜோதிட மகரிஷி"**
**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: **0091-9840160068**
**9940431377**




**சிம்மம்:** சாதகமான சூழ்நிலை அமையும் வாரம். தொலைதூரப் பயணம் லாபம் தரும். பணிச்சுமை குறையும். வியாபாரத்தில் மந்த நிலை அகலும். சொந்த தொழிலமையும். கவலைகள் அடியோடு விலகும். யோகப் பலன்கள் கிடைக்கும். கிள்ளிக் கிடைக்கும் யோகத்தால் துள்ளிக் குதிப்பீர்கள். புதிய சொத்துக்கள் சேரும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். வெளியூர் பயணம் லாபம் தரும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எடுத்தக் காரியம் தடைப்படும். எதிலும் கவனம் தேவை. கூட்டுத்தொழிலில் பிரிவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். திடீர் தனவரவுகள் அதிகரிக்கும். கணவன், மனைவி கௌரவம் உயரும். இனிய செய்தியால் மனம் மகிழும். சோதனைகள் விலகி, சாதனையான எண்ணம் நிறைவேறும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. உஷ்ண நோய் ஏற்பட்டு மறையும். உடன் பிறந்தோரால் உதவி உண்டு. நிதிப்பற்றாக்குறை நீங்கும். கலைத்தொழில் லாபம் தரும். பொறுமையுள்ள பெண்களுக்கு பெருமை சேரும் அருமையான காலம். அமைதியாக இருப்பது நல்லது. உடல் உபாதைகள் ஏற்பட்டு மறையும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். போட்டி, பொறாமைகள் விலகும். புத்திரர் வழியில் கவலை ஏற்படலாம். புதிய நட்பை தவிர்க்கவும். பணியில் நிம்மதி குறையும். திடீர் செலவுகள் உண்டாகும். உத்தியோக மாற்றம் உண்டு. காலணிகள் காணாமல் போகும். காதல் எண்ணம் உருவாகும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். மறைமுக தொல்லை நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 5,1,3,4

அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,Y




**கன்னி:** ஆசைப்பட்ட பொருட்கள் வாங்கும் வாரம். உடல் ஆரோக்கியம் சீராகும். மேலதிகாரியின் ஆதரவு உண்டு. கால்நடைகளால் மேன்மை உண்டு. ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அரசாங்க அனுகூலம் உண்டு. வேண்டாத நபர்கள் விலகிடுவர். விவேகமான காலமாக அமையும். கட்டிடத்தொழில் லாபம் தரும். விவசாயம் கவனம் தேவை. வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பழைய நண்பரால் பண விரயம் உண்டு. புதிய சிந்தனைகள் உருவாகும். கலையார்வம் கூடும். கேட்ட இடத்தில் கடன் கிட்டும். காரியத்தடை அகலும். இல்லத்தில் மகிழ்ச்சியுண்டு. போட்டிகள் உருவாகி மறையும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். நல்லவர் நட்பு கூடி வரும். நல்ல வாய்ப்புக்கள் தேடி வரும். வருமான வரி தொல்லை உண்டு. பொறியியல் துறை லாபம் தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். செயல்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். கடன் பிரச்சனை முற்றிலும் தீரும். செல்வாக்கு உயரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழில் அமையும். பாராட்டுக்கள் உயரும். வெளியூர் பயணம் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். மன சந்தோஷம் கூடும். நல்லவர் நட்பு கிட்டும். தோற்றப்பொலிவு கூடும். நேரம் காலம் பார்க்காமல் உழைப்பீர்கள். மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். நீண்ட நாளைய பிரச்சனைகள் முடிவுக்கு வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 2,9,5,7

அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,V




**துலாம்:** முன்னேற்றம் கிடைக்கும் வாரம். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரம் லாபம் தரும். முன் கோபம் தவிர்க்கவம். பயணம் பலன் தரும். பெண்களுக்கு கவனம் தேவை. மருத்துவச் செலவு உண்டு. ஆடை, அணிகலன் சேரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். உருண்டு பிரண்டாலும் கிடைக்காத செல்வம் இன்று கிடைக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர் வருகை ஏற்படும். வழக்கு வெற்றி தரும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. குடும்ப ஒற்றுமை மேலோங்கும். மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். அரசு வழி ஆதாயம் கிட்டும். சகோதரியினால் அனுகூலம் உண்டு. கலைத்துறையில் திருப்பம் ஏற்படும். எதிரிகள் உதிரியாவார்கள். மனோ தைரியம் அதிகரிக்கும். முடியாத விஷயங்களைக் கூட தெளிவாகச் செய்து முடிப்பீர்கள். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் சீராகும். கடல் கடந்த பயணம் லாபம் தரும். சுறுசுறுப்பு அதிகமாகும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். கமிஷன் தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. மங்களச் செய்தி வரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் உற்சாகம் அடைவார்கள். உறவினர்களால் உதவி கிட்டும். உயர்கல்வி ஆர்வம் கூடும். வியாபாரம் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,4,5,9

அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,L

(தொடர்ச்சி 22 பக்கம்)


உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?
Legalize your basement now!
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets
Coverall Group Inc.
Contact: Siva
416-706-8160 OR 416-893-3216


20/20 CA$H RU$$H
Western Union- Money Transfer, Payout, Bill Payments
Buying Used Gold-Top Dollar paid
Pawning
Small Loans
நகைகள் திருத்தம் செய்து கொடுக்கப்படும்
இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ள இலக்கங்களை கொண்ட வாடிக்கையாளர்கள் தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொண்டு அடவுகளை மீட்கவும்.
Kindly redeem the following pawn ticket number immediately
Cr436,187,279,382,231,342,460,522,251,365,611,602,233,304,356,533,534,568,453,
182,509,536, 176,555,115,234,376,431,460,258
இலங்கையில் உள்ள உங்கள் உறவுகளுடன் குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்வதற்கான Pre-paid Top up ஐ எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு :
Tel : 416-291-CASH (2274)
Fax : 416-291-2276
E-mail : 2020cashrusshcorp@gmail.com | www.2020cashrussh.ca
4049 Sheppard Ave., East Scarborough. ON. M1S 1S8

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கை பாதுகாப்பு அமைச்சின் அனுமதி அவசியமில்லை, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைந்து செம்மணியில் ஸ்கேன் பரிசோதனை

## செம்மணி புதைகுழிகள் அமைந்த இடத்திலிருந்து சட்டத்தரணி ரணிதா ஞானராஜா தெரிவிப்பு



பாதுகாப்பு அமைச்சிடமிருந்து புதிதாக அனுமதி பெற தேவைப்படாத காரணத்தால் கொழும்பு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஸ்கேன் செய்யும் இயந்திரத்தின் ஊடாக ஓகஸ்ட் 4 ஆம் திகதி ஆய்வுகளை நடத்த எதிர்பார்ப்பதாகவும், பாதிக்கப்பட்டவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி ரணிதா ஞானராஜா, 29ம் திகதி அன்றைய தினம் செவ்வாய்க்கிழமையன்று ஊடகங்களுக்குத் தெரிவித்தார். போரினால் பாதிக்கப்பட்ட வடக்கில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழியில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்டோரின் எலும்புக்கூடுகள் தற்போது அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

மே மாத நடுப்பகுதியில் ஆரம்பமான அகழ்வாராய்ச்சிகளுக்கு அமைய அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் நாட்டின் மூன்றாவது பெரிய மனித புதைகுழியாக இது மாறியுள்ளது.

செம்மணி சித்துப்பாத்தி மனித புதைகுழியில் அகழ்வாய்வில் சிறுவர்கள் உட்பட 102 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதோடு, கண்டறியப்பட்ட மொத்த எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 115 ஆக உயர்வடைந்துள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் சார்பான சட்டத்தரணி ரணிதா ஞானராஜா குறிப்பிடுகின்றார்.

தடயவியல் அகழ்வாய்வுத் தளம் 1 இல், ஒரு பெரிய எலும்புக்கூடுக்கு அருகில், இன்று ஒரு குழந்தையின் எலும்புக்கூடு மீட்கப்பட்டதாக அவர் கூறுகின்றார்.

"நேற்றைய அகழ்வின்போது ஒரு பெரிய எலும்புக்கூட்டோடு குழந்தையின் எலும்புக்கூடு ஒன்று அரவணைக்கப்பட்ட விதத்தில் காணப்பட்டது. அது முழுமையாக இன்று அகழ்ந்து எடுக்கப்பட்டது."

மனித எலும்புகளுடன், செம்மணி சித்துப்பாத்தி மனித புதைகுழியில் இருந்து இதுவரை மீட்கப்பட்ட சான்றுப் பொருட்களில் குழந்தை பால் போத்தல், குழந்தைகள் விளையாடும் பொம்மை, காலணிகள் மற்றும் பாடசாலை பைகள் ஆகியவை அடங்கும்.

தற்போது தோண்டப்படும் பகுதிக்கு அப்பால் மனித எலும்புகள் இன்னும் உள்ளனவா என்பதைக் கண்டறிய, அந்த இடத்தை ஸ்கேன் பரிசோதனை செய்ய ஜூலை 25 அன்று பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி கோரப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சிடமிருந்து புதிய அனுமதி தேவையில்லை எனவும், பாதுகாப்பு அமைச்சிடமிருந்து புதிதாக அனுமதி பெற தேவைப்படாத ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஸ்கேன் இயந்திரத்தின் ஊடாக ஓகஸ்ட் 4 ஆம் திகதி ஆய்வுகளை நடத்த எதிர்பார்ப்பதாகவும், பாதிக்கப்பட்டவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி ரணிதா ஞானராஜா, ஜூலை 29 ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

எலும்புக்கூடுகள் தற்செயலாக கண்டுபிடிக்கப்பட்ட செம்மணி சித்துப்பாத்தி மயான பூமியில் அகழ்வாராய்ச்சிகள், தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவா மற்றும் யாழ்ப்பாண சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ், மே 15, 2025 ஆரம்பமானது.

# இவ்வார ராசிபலன்


( 20 பக்கம் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** வறுமைகள் விலகும் வாரம். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகளின் தொல்லை அதிகரிக்கும். மனைவியால் மரியாதை உயரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். புதிய முதலீடு உருவாகும். கற்பனை திறன் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லை குறையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கிடைக்கும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் கூடும். மரபை மீறிப் பேசிய உறவுகள் மனதாரப் பாராட்டுவார்கள். அணிகலன் சேர்க்கையுண்டு. கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். அறிமுகம் இல்லாதவர் மூலம் ஆதாயம் கிடைக்கும். பூமி வாங்கும் யோகம் உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டாகும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். செல்வமும், புகழும் சேரும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். அறிவாற்றல் பளிச்சிடும். உடல்நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 8,5,9,3
அதிர்ஷ்ட நிறம்: சந்தன நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,X




**தனுசு:** புதுமைகள் நிறைந்த வாரம். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றம் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். குடும்ப அன்யோன்யம் கூடும். வேலைப்பளு குறையும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு உண்டு. மனோ பயம் ஏற்படும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. முதுகில் வலி வந்து போகும். திடீர் பயணம் உண்டு. மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும். உடன் பிறப்பால் உதவி உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். சுபகாரியம் கைகூடி வரும். சொத்துச் சேர்க்கை உண்டு. தனித்து நின்று ஜெயித்துக் காட்டுவீர்கள். புதிய வாய்ப்புத் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எதிர்பார்ப்புகள் குறையும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் கூடும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தொல்லைகள் குறையும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். மன சஞ்சலம் குறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கல்வியில் மந்த நிலை ஏற்படும். உலோகத்தொழில் உயர்வு தரும். எண்ணிய காரியம் கைக்கூடும். ஏற்றங்கள் அதிகரிக்கும். கட்டுமானப் பணியில் உள்ளவர்களுக்கு கௌரவம் கூடும். சுயத்தொழிலில் கவனம் தேவை. பழையக்கடன் வசூலாகும். உடல்வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மறையும். நன்மைகள் அதிகரிக்கும் காலம். குதூகல எண்ணம் அதிகரிக்கும். செயலில் துணிவு கூடும். வாகனச் செலவு ஏற்படும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். விருப்பமான தொழிலமையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 3,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,R




**மகரம்:** பயணம் லாபம் தரும் வாரம். பக்கத்து வீட்டுப் பகை மாறும். உடல்சோர்வு ஏற்படும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். புதிய நட்பு உருவாகும். மெத்தனப் போக்கு மாறும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி தேடி வரும். சந்தர்பங்கள் சாதகமாக அமையும். திறமைகள் பளிச்சிடும். உறவினர் வருகை ஏற்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர்கள் ஆலோசனை பயன் தரும். உடல்நிலையில் கவனம் தேவை. நட்பில் பிரிவு ஏற்படும். தனவரவுகள் தடைப்படும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். கண்ணாடித் தொழில் ஏற்றம் தரும். திருப்பங்கள் ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் லாபம் தரும். கனவு பலிதமாகும். விளையாட்டுத் துறையில் வெகுமதி உண்டாகும். தொல்லை தந்தவர் விலகிடுவர். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். சகோதர வழியில் சகாயம் கிட்டும். நடுத்தரமான நன்மைகள் கிடைக்கும் காலம். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். சேமிப்பு உயரும். விவாத முயற்சி வெற்றி பெறும். குடும்பத்தில் குதூகலம் தாண்டவமாகும். ஆசைகள் பூர்த்தியாகும். பெண்களின் கௌரவம் உயரும். இயந்திர பணியில் நிதானம் தேவை. சொல்லில் கவனம் தேவை. ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். இனியச் செய்தியால் மனம் மகிழும். பெருமைகள் கூடும். வறுமைகள் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: குருபகவான், அதிர்ஷ்ட எண்: 4,3,2,5
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**கும்பம்:** நட்பு வட்டம் விரிவடையும் வாரம். மாணவர் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. தன்னம்பிக்கை கூடும். நிர்வாகத் திறமை கூடும். அரசாங்க அனுகூலம் உண்டு. நினைத்தது நிறைவேறும். அந்தஸ்து அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். பழையக் கடன் ஒழியும். இடமாற்றம் நன்மை தரும். சாதனைகள் நிகழ்த்தும் காலம். தாய் வழி உறவால் நன்மைகள் உண்டாகும். வியாபாரத்தில் விரயங்கள் கூடும். கடன் தொல்லை குறையும். கூட்டுத்தொழிலில் மோசடி ஏற்படும். இடையூறுகள் அதிகமாகும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றி தரும். தொழில் வழி தொல்லை குறையும். கஷ்ட காலம் விலகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடி வரும். பொருளாதார வளர்ச்சி பெருகும். மகிழ்வான நிகழ்வுகளை சந்திப்பீர்கள். கலை ஆர்வம் பெருகும். விபரீதப் போக்கு மாறும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். சொல்லில் கவனம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. அலைபேசி செய்தி ஆனந்தம் தரும். பாராட்டுக்கள் தேடி வரும். கடமையில் தடங்கல் ஏற்படும். காதலில் பிரிவு ஏற்படும். கல்விக்கடன் ஏற்படும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். கணவன், மனைவி ஒற்றுமை அதிகரிக்கும். கல்வித்துறையில் உள்ளவர்களுக்கு கைமேல் பலன் கிடைக்கும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். கடன் பிரச்சனை தீர்வுக்கு வரும். செயல்திறமை வெளிப்படும். வருமானம் உயரும். காதலில் கண்ணியம் கூடும். நெருக்கடிகள் நீங்கும். அரசியலில் புகழ் சேரும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். கர்ஜனையோடு வலம் வருவீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,J




**மீனம்:** போட்டிகள் உருவாகி மறையும் வாரம். கூட்டுத்தொழில் லாபம் தரும். பணிமாற்றம் ஏற்படும். உத்தியோகத் திருப்பம் ஏற்படும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். சோதனைகள் குறையும். தொழில் போட்டி உருவாகும். கல்விச் சலுகைகள் கிட்டும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். இனிய நட்புக்களால் பெரிய வெற்றி கிடைக்கக் கூடிய காலம். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். திடீர் தனவரவு உண்டு. அரசியலில் புகழ் கூடும். அடிப்படை தேவைகள் நிறைவேறும். ஆரோக்கியம் கூடும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அரசு உதவிகள் கிட்டும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. சுபகாரிய செய்தி வரும். தகுதியோடும், மிகுதியோடும் வலம் வரக்கூடிய ஜெயமான காலம். அனுகூலமான போக்கு நிலவி வரும். மன சந்தோஷம் கூடும். சினத்தைத் தவிர்ப்பது நல்லது. புத்தாடை ஆபரணச் சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். கடனால் பிரச்சனை வரும். வெற்றிகள் குவியும். ஆன்றோர் வாழ்த்துக் கிட்டும். கொள்கையில் பிடிப்பு ஏற்படும். சாதனை நிகழும் காலம். உடல் உபாதை தீரும். வேற்று மதத்தினரால் உதவிகள் கிட்டும். மாற்று எண்ணங்கள் உதயமாகும். தோற்றம் பொலிவு கூடும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். உறவினர்கள் பாராட்டுக் கிட்டும். பழைய நட்புத் தொல்லை தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மை தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 4,5,7,9
அதிர்ஷ்ட நிறம்: செந்நிறம் (சிகப்பு), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,P

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

**NESAN**

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8




மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164





26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்







உதயம் 1530 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 1, 2025


# ”நமது எழுத்தாளர் தீபச்செல்வன் தனது எழுத்துப் பயணத்தில் பல இடர்பாடுகளை எதிர்கொண்டு, தொடர்ந்து ஈடுபட்டு வரும் ஒரு படைப்பாளி.”

## கனடாவில் "சயனைட்" நாவல் அறிமுக விழாவில் அரசியல் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர் நிமால் விநாயகமூர்த்தி புகழாரம்



”இலங்கைத் தீவில் இருந்து எழும் எழுத்தாளர்கள் பலர், பல்வேறு கட்டுப்பாடுகளையும், அரசியல் மற்றும் சமூக நெருக்கடிகளையும் மீறி தங்கள் குரலை எழுப்பி வருகிறார்கள். அவர்களின் அனுபவங்களும் பார்வையும் அனைத்துலகத்திலும் உள்ள வாசகர்களை சென்றடைய வேண்டும் என்பதற்கு அப்பால் தாயகத்தில் அவர்கள் அனுபவிக்கும் சவால்கள் மற்றும் அரச பயங்கரவாதத்தின் மிரட்டல்கள் மற்றும் எச்சரிக்கைகள் ஆகியவற்றையும் தாங்கிய வண்ணம் உள்ளார்கள். இங்கு முக்கியமாக நமது எழுத்தாளர் தீபச்செல்வனும் இந்நெறியில் பல இடர்பாடுகளை எதிர்கொண்டு, எழுத்துப்பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் ஒரு முக்கியமான படைப்பாளி. எனவே புலம் பெயர் தமிழர்கள் அவரது படைப்பிலக்கியப் பணியை ஊக்குவிக்கும் வகையில் உதவிட வேண்டும்.”

இவ்வாறு கனடா வாழ் அரசியல் மற்றும் சமூகச் செயற்பாட்டாளரும் கணக்காளருமான நிமால் நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் தெரிவித்தார். (தொடர்ச்சி 11ம் பக்கம்)

# Global Federation of Sri Lankan Business Councils என்னும் சர்வதேச வர்த்தகர்கள் அமைப்பின் செயலாளர் நாயகமாகத் தேர்தெடுக்கப்பெற்றுள்ள கனடா வாழ் வர்த்தகப் பிரமுகர் குலா செல்லத்துரை




இலங்கையைத் தாயகமாகக் கொண்டு. தற்போது உலகின் பல நாடுகளிலும் வர்த்தகத் துறையில் வெற்றிகரமாக ஈடுபட்டுவரும் வர்த்தகர்களின் கூட்டுச் சம்மேளனமான புடழடியட குநனநசயவழைெ ழக ளுசை டுயமெயெ டீரளiநௌள ஊழரஉெடைள என்னும் சர்வதேச வர்த்தகர்கள் சம்மேளனத்தின் அங்குரார்ப்பண வைபவம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இலங்கையின் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட இந்த வைபவத்தில் மேற்படி சம்மேளனத்தின் பிரதிச் செயலாளர் நாயகமாக (னுநிரவல ளுநஉசநவயசல புநநெசயட.) கனடா வாழ் வர்த்தகப் பிரமுகரும் சமூகச் செயற்பாட்டாளருமான குலா செல்லத்துரை அவர்கள் தேர்தெடுக்கப்பெற்றுள்ளார்.

கனடா உதயன் பத்திரிகை நிறுவனமும் நண்பர் குலா செல்லத்துரை அவர்களை வாழ்த்துகின்றது.

# றொறன்ரோ நகர சபையின் SCARBOROUGH ROUGE PARK -WARD 25 வட்டாரத்திற்கான இடைத்தேர்தலில் போட்டியிடும் சியான் சின்னராஜாவின் தேர்தல் பிரச்சார அலுவலகம்



றொறன்ரோ நகர சபையின் SCARBOROUGH ROUGE PARK -WARD-25 வட்டாரத்திற்கான இடைத்தேர்தலில் போட்டியிடும் நான்கு தமிழ் பேசும் வேட்பாளர்களில் ஒருவரும் தொழில் அதிபரும் ஈழத்தமிழரான சியான் சின்னராஜா அவர்களின் தேர்தல் பிரச்சார அலுவலகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை 27ம் திகதி மாலை பழைய கிங்ஸ்ரன் வீதியில் திறந்து வைக்கப்பெற்றது.

மேற்படி வட்டாரத்தில் வாழும் வாக்காளப் பெருமக்கள் மற்றும் நண்பர்கள்- வர்த்தகப் பெருமக்கள்- மற்றும் ஆதரவாளர்கள்- தொண்டர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு தங்கள் ஆதரவைத் தெரிவித்தார்கள்.

மிகவும் உற்சாகமாக மேற்படி தேர்தல் பிரச்சார அலுவலகம் திறந்து வைக்கப்பெற்றது குறிப்பிடத்தக்கது.

# றொறன்ரோ நகர சபையின் SCARBOROUGH ROUGE PARK -WARD 25 வட்டாரத்திற்கான இடைத்தேர்தலில் போட்டியிடும் சியான் சின்னராஜாவிற்கு ஆதரவை வழங்கவுள்ள ஒன்றாரியோ மாகாண அமைச்சர்



விரைவில் நடைபெறவுள்ள றொறன்ரோ நகர சபையின் SCARBOROUGH ROUGE PARK -WARD-25 வட்டாரத்திற்கான இடைத்தேர்தலில் போட்டியிடும் சியான் சின்னராஜாவிற்கு தனது ஆதரவை வழங்கவுள்ள ஒன்றாரியோ மாகாண அமைச்சர் ரேமண்ட் ' சோ அவர்கள் சியான் சின்னராசாவை நேரடியாகச் சந்தித்து தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

இடைத்தேர்தலில் போட்டியிடும் தொழில் அதிபரும் ஈழத்தமிழரான சியான் சின்னராஜா அவர்களை வாழ்த்த விரும்புவோர் 416 882 0118 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

# தாய் மண்ணில் வாழ்ந்தபடி நெருக்கடிகளுக்கு மத்தியில் தொடர்ந்து எழுத்தின் வழி தனது மேன்மையான பங்களிப்பை ஆற்றும் தீபச்செல்வனுக்கு நன்றியும் பாராட்டுகளும்.



எழுத்தாளர் தீபச்செல்வனின் “சயனைட்“ என்னும் போர்க்கால நாவல் தொடர்பான கனடிய விமர்சகர் “அன்பு“ அவர்களின் பார்வை

309 பக்கங்களும் 40 அத்தியாயங்களும் கொண்ட சயனைடு என்ற இந்நூல், இன அழிப்புப்போரால் ஏதோவொரு வகையில் நாளாந்தம் பாதிக்கப்பட்டு தனது பதின்ம வயதில் கண்ணெதிரே தந்தையையும் பறிகொடுத்து தனது மக்களின் விடுதலைக்குப் போராடுவதென்பதே நிரந்தர விடிவைத் தரும் என்பதை முழுமையாக நம்பித் தன்னை அதற்காக அர்ப்பணித்துப் போராடச்செல்லும் ஒரு இளைஞனைப் பற்றிய கதை.. அப்படிப் போராடச் செல்கிறவன் ஒரு முனையில் எதிரியினை எதிர்த்துப் போராடுகிறான். மறு முனையில் மக்கள் முன்னேற்றம், சமூக சேவைகள், கல்வி, நலத்திட்டங்கள் போன்றவற்றில் முனைப்போடு செயற்பட்டு சமூக மேம்பாட்டுக்கும் உழைக்கிறான். தன் சமூகத்தின் எதிர்காலத்திற்கு ஒரு நம்பிக்கை ஒளியாக இருக்கிறான். (தொடர்ச்சி 15ம் பக்கம்)